உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰ரு { பிரமாதி, புரட்டாசி } மலர் ௬

முகப்புப் படம்
திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் B.A., B.L., M.L.C.,
க. மெய்ப்பாட்டியல் 205
திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L.
உ. கோற்று அட்டி ஆளார் 213
திரு. ம. பாலசுப்பிரமணியமுதலியார் பி.ஏ.,பி.எல்.
ஙூ. தென்னாட்டுக் காட்சிகள் 215
திரு. டி. ஜி. ஆராவமுதன்
ச. பேரறிவாளன் 221
வித்துவான் திரு. ரே. திருமலைஅய்யங்கார் அவர்கள்
ரு. கரந்தைத் தமிழ்ச்சங்கம் 28-ஆம் ஆண்டுவிழா
தலைவர் முன்னுரை 223
௬. வள்ளல் கண்டீரக்கோப்பெருநள்ளி (நாடகம்) 229
திரு. சிவ. துப்புசாமி அவர்கள்
எ. பிராட்டிக்கிராவணன் தோட்டபழியுண்டா? 235
திரு. R. பொன்னுசாமிபிள்ளை அவர்கள்
அ. தமிழ்ச் செய்திகள் 242
(க) கரந்தைத் தமிழ்ச் சங்கம்
(உ) ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள்
பொன்விழா—அறிவிப்பு
கூ. மதிப்புரை 244
௰. நன்கொடைகள் 244
௰க புகையிலை வரி—அரசாங்க அறிவிப்பு (சேர்க்கை)
பொழிற்றொண்டர்

பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்



கரந்தைத் தமிழ்ச் சங்கத்து உ௰அ-ஆம்
ஆண்டுவிழாத் தலைவர், யாழ்ப்பாணம் திருவாளர்,
சு. நடேசபிள்ளை அவர்கள் B. A., B. L., M. L. C.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௰௫ | பிரமாதி, புரட்டாசி | மலர் ௬ |


(திருவாளர், S. சோமசுந்தரபாரதியார் அவர்கள், M. A., B. L., பசுமலை)

## மெய்ப்பாட்டியல்

### முன்னுரை.

தொல்காப்பியப் பொருட்பகுதி, தமிழ்கூறுநல்லுலகத்தில், நல்லிசைப்புலவர் புனையும் செய்யுண்முறையும், அச்செய்யுட் கெல்லாம் சிறந்துரிய பொருட்டுறையும், இவற்றின் பல்வேறுறுப்பியல்களும் வகுத்து விளக்குவதாகும். மக்கள் கருதுவது பொருளே யாதலானும், செய்யுள், பொருளைப் புனைந்துரைக்குங் கருவியேயாதலானும், முதலில் சிறப்புடைப் பொருட்டுறைவகைகள் அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் என ஐந்தியலான் வகைபடத் தொகுத்து விளக்கப் பட்டன. பின் அகப்புறப் பொருள்களைப் புனைந்துரைக்கும் செய்யுள் வகை கூறத் தொடங்கி அச்செய்யுளுறுப்புக்களுள் பொருட்சிறப்பிற்கு மிக்குரிமையுடைய மெய்ப்பாடு, உவமை வகைகளை முன் இரண்டியல்களான் முறையே வகுத்து விளக்கிப் பிறகு பிற செய்யுளுறுப்பும் அமைப்பும் வகையும் செய்யுளியலில் தொல்காப்பியர் தொகுப்பாராயினர். இம்முறையில் இவ்வியல் 'மெய்ப்பாடு' என்னும் செய்யுளுறுப்பை விளக்குவதாகும்.

மெய்ப்பாடு என்பது அகவுணர்வுகளை ஆராயாமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் புறவுடல் இயற்குறியாம். மெய்ப் படத்தோன்றும் உள்ளுணர்வை மெய்ப்பாடென்றது ஆகுபெயர். உள்ளுணர்வை உரிய புறவியற் குறியால் புலவன் செய்யுளில் புலப்பட அமைத்தல் வேண்டுமாதலின், செய்யுளுறுப்புக்களுள்

மெய்ப்பாடு சிறப்பிடம் பெற்றது. இதுவே மெய்ப்பாட்டியல் என்பது,

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்" (செய். சூ. 204.)

எனும் செய்யுளியற் சூத்திரம் விளக்குவ தாலறிக.

இம்மெய்ப்பாடுகள் பொதுவாக அகப்புறப்பொருட்டுறை அனைத்திற்கும் அமையவருவனவும், சிறப்பாக அகத்துறைகட் காவனவும் என இயல் வேறுபாடுடையவாதலின், பொதுவியல் புடையவற்றை இவ்வியலில் முதற்கூறிச் சிறப்பியல்பாவன பின்னர் விளக்கப்பெறுகின்றன. ஒருவரின் உள்ளுணர்வுகளுள் மற்றவர் கண்டுங் கேட்டும் அறியப் புறவுடற் குறியாற் புலப்படு பவையே இயற்றமிழ்ச் செய்யுளில் மெய்ப்பாடெனப் பெறும்; கூத்துநூலில் 'விறல்' எனப்படுவதும், வடநூலார் சத்துவம் என்பதும் புறக்குறியே யாகும்.

இனி, தொல்காப்பியம் முற்றிலும் இயற்றமிழ் நூலேயாம். அதனால் அதுகூறும் பிறசெய்யுளுறுப்புக்களைப் போலவே மெய்ப்பாடும், இயற்றமிழ்ப் புலவன் இயற்றும் செய்யுளில் உரைக்கக் கருதும் உள்ளுணர்வுகளை உள்ளவாறு எவரும் உணர் தற்குதவும் தமிழ்ச்செய்யுளுறுப்பேயாகும். பாட்டு, உரை, நூல் முதலிய எழுவகைத் தமிழ்ச் செய்யுளெல்லாம் 'வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ்கூறும்' முடிவேந்தர் 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பெயரெல்லை அகத்து' தமிழருள்வழங்கும் யாப்பின்வழியதாமெனச் செய்யுளியலினும், ஆரியநூல் வழக்குகளைக் கொள்ளாது தமிழ் மரபினையே தான் கூறுவதாகப் பலவிடத்தும் தொல்காப்பியரே வற்புறுத்துவ தாலும், தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாடுள்ளிட்ட செய்யு ளுறுப்பனைத்தும் இயற்றமிழ் மாபு தழுவியவேயாகும் என்பது ஒருதலை. இவ்வுண்மைக்கு மாறாகப் பிற்கால உரைகாரர் தொல் காப்பியத்திற்குக் காலத்தாற் பிந்திய வடஆரியக் கூத்துநூல் களின் கொள்கைகளை தொல்காப்பியமும் கூறுவதாகக்கொண்டு இவ்வியற்றமிழ்நூற் சூத்திரங்களுள் வடநூல் வழக்குகளைப் புகுத்தி இடர்ப்பட்டுச் சொல்லொடு பொருந்தா வல்லுரை வகுத்து மயங்க வைத்தார். சொற்றொடர் சுட்டும் செம் பொருளே செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு மயங்கா மரபிற் புலம் தொகுத்த தொல்காப்பியரின் கருத்தாமாறுணர்ந்து நோக்கின், செய்யுளுறுப்புக்களுள் ஒன்றாய் எண்ணப்பட்டுச்

செய்யுளியலில் 204-ஆம் சூத்திரத்தால் தெளிக்கப்பெறும் மெய்ப்பாடுகளின் இயல்வகைகளே இம்மெய்ப்பாட்டியலில் முறைப்படஎண்ணி விரிக்கப்பெறுஞ் செவ்வி இனிது விளங்கும்.

இவ்வியல் முதற்சூத்திரம், 'எண்வகையியல் நெறிபிழையா' தெனச் செய்யுளியல் 205-ஆம் சூத்திரம் கூறும் அகப்புறப் பொருட்டுறை அனைத்திற்கும் பொதுவாய் மெய்ப்பாட்டுப் பொருளா முள்ளுணர்வு முப்பத்திரண்டும் புறத்தே முறையே நானான்காய்த் தொக்கு எண்ணான்காகுமெனக் கூறும். இரண்டாம் சூத்திரம், அவ்வா றெண்வகையாவனவே யன்றி, வேறு எவ்வெட்டாய்த் தொகுத்து எண்ணப்படும் முப்பத்திரண்டும், இரட்டுறமொழிதலால் நாலிரண்டாகும் என்பதை உம்மைத் தொகையாக்கி நாலும் இரண்டும் கூட்டி அறு வகைத் தொகைகளாய் எண்ணப்படுவனவும், ஆக அகப்பகுதிக்கே உரிய பிறசெய்யுளுறுப்பாம் உள்ளுணர்வுகளும் உளவென்பது கூறு கிறது. மூன்றும்சூத்திரம், முதலிற்கூறிய நானான்காய்த் தொக்கு அகம்-புறம்இருபொருட்கும்பொதுவாய்வரும்எட்டுவகைமெய்ப் பாடுகள் இவையென விளக்கும். 4 முதல் 11 வரையிலுள்ள சூத்திரங்கள், அவ்வினத்தொகை எட்டும் தனிவகைபிரிக்கவரும் முப்பத்திரண்டன் பெயரும் வகையும் விரிக்கும். 12-வது சூத்திரம், நந்நான்காய் இவ்வாறெண்வகை இயநெறிபிழையாது வருவனவுமன்றி, எவ்வெட்டாய்த் தொகுத்தெண்ணப்படும் அகவுணர்வுகள் வேறும் உள என முன் இரண்டாம் சூத்திரம் சுட்டியவற்றின் பெயரும் வகையும் கூறும். பதின் மூன்று முதல் பதினெட்டு முடியவரும் ஆறு சூத்திரத்தால், அன்பொடு புணர்ந்த காதற்கூட்டத்தில் தோன்றும் அறுவகைத் தொகைபெறும் அகத்துறை மெய்ப்பாடுகள் தெளிக்கப்படு கின்றன. 19-ஆம்சூத்திரம், அறுவகைப்படுமவையும் அன்னவை பிறவும் புணர்வுணர்வின் நிமித்தமாமென உணர்த்துகிறது. 20- ஆம் சூத்திரம், மேலவற்றிற்குப் புறனடையாய், அவை கூறும் அகத்துறைமெய்ப்பாடுகள் கைபறவுற்றுழி கூறியமுறை யால் வினைப்பட்டுத் தோன்றுமையும் இயல்பாமெனக் கூறும். 21 முதல் 24 வரையுள்ள சூத்திரங்கள் குறிஞ்சி அல்லாத அக வகை உணர்வுகள் மெய்ப்பாடாவன கூறுகின்றன. 25, 26 சூத்திரமிரண்டும் நிரலே அன்புத்திணைக்காவனவும் அல்லனவு மாம் குறிப்புக்களை விளக்குகின்றன. 27-ஆம் சூத்திரம், இவ் வியலுக்குப் பொதுப்புறனடையாய் மெய்ப்பாடுகளின் இயல் வகைகளை நுண்ணுணர்வுடையாரல்லார் எண்ணி வரைபறுத் தலின் அருமை கூறுகிறது.

## மெய்ப்பாட்டியற் சூத்திரங்கள்.

சூத்திரம். 1.

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப

**கருத்து :—** இஃது இயற்றமிழ்ச் செய்யுளுள் யாண்டும் பயிலும் பொது மெய்ப்பாடுகளின் தொகையும் அவை வகைப்படு மாறும் கூறுகிறது.

**பொருள் :—** பண்ணைத்தோன்றிய எண்ணான்கு பொருளும் = தனிநிலை கருதாமல் இனத்தொகுதியாய் எண்ணப்படும் மெய்ப் பாட்டுப் பொருளாம் உணர்வுகள் முப்பத்திரண்டும்; கண்ணிய புறனே நானான்கென்ப = மெய்ப்படப் புறத்தே பொருந்தப் புலப்படும் வெளிக்குறியால் நாலுநாலாய்த் தொகுத்து எண்ணப் படும் என்பர் புலவர்.

**குறிப்பு :—** பொருளும் என்பதன் உம்மை, இனைத்தென அறி தலின், முற்றும்மை. பண்ணை என்பது தொகுதி. இஃது இப் பொருட்டாதல் "ஒலித்தன முரசின் பண்ணை" என்னும் கம்பரின் (மகரக்கண்ணன் வதை) செய்யுளடியாற் றெளிக; பலமுளை ஒருங்கு கிளைக்கும் ஒரு தட்டைத் தூறும், உறவினர் செறிந்த ஒருபெருங்குடியும், உறுப்பினர் நிறைந்த ஒருகழகமும், தொகுதிபற்றிப் பண்ணை யெனப்படுதலானு மறிக.

இனி, எண்ணான்கு என்றது, ஒத்த குறியியல் கருதி இனம் புணர்க்காமல், தனித்தனி எண்ணவரும் மெய்ப்பாட்டுப் பொருளாமுள்ளுணர்வுகளின் தொகையெண்; நானான்கென்றது, அவை முப்பத்திரண்டையும் மெய்ப்படு குறியியல் ஒப்பால் நிரலேஇனம்புணர்த்தெண்ணும் வகைமுறை. இதன்பின் எள்ளல் முதல் விளையாட்டிறுதி தனிவகுத்து எண்ணப்பட்ட முப்பத் திரண்டும், மெய்ப்படுபுறக்குறி இயலொப்பால் இனம்புணர்த்து நந்நான்காய்த் தொகுக்குங்கால், "நகை முதல் உவகை" ஈறாய் அப்பாலெட்டே மெய்ப்பாடெனப் படுபவற்றுளடங்கும். எண் வகையியல்நெறி கருதி இவ்வாறு கூறப்பட்டன என்க.

நான்கன் முன் நான்கு நானான்காமாறு, "நான்கன் ஒற்றே ல-காரமாகும்" (457); "வ-கரம் வருவழி (452), ........ நான்கன் ஒற்றே ல-காரமாகும் (453)"; "உயிர் வருகாலை (455) ........ மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும் தோன்றிய வகரத் தியற்கையாகும்" (456) எனும் தொல்காப்பிய

எழுத்ததிகாரச் சூத்திரங்களாலறிக. இன்னும் " க—ச—த—ப முன் மொழி வருஉங்காலை, ——— மூன்றன் ஒற்றே வந்த தொக்கும்." (449) எனவும், "ந—ம—வருகாலை, ஐந்தும் மூன்றும் வந்ததொக்கும் ஒற்றியல் நிலையே" (451) எனவும் தெளிக்கும் தொல்காப்பியர், நான்கன் ஒற்று மவ்வாருகும் எனக் கூருமையானும், முதற் பத்தெண்களுள், "மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" எனச் சுட்டிவிட்டு, நான்கன் முதலுக்குக் குறுக்கம் யாண்டும் குறியாமையானும், நானூற் றிசை-(களவழி.6)--நானூறு--நானிலம்--நானூல்--நாலெட்டு--நாலீரைம்பது—நாலிரண்டு—எனவே பல்காலும் பலவிடத்தும் பண்டைச் சான்றோர் செய்யுட்களில் பயிலுதலானும், ந-கரம் வருங்கால், நான்கன் ஒற்று லகரமாகி, முதல் குறுகாது நாலென நின்று, வரு நான்கொடு புணர்ந்து நானூன்கென வருதலே மரபாமாறு தேறப்படும். பிந்திய நன்னூலாரும், "ஒன்று முதலெட்டீருமெண்களுள் --------- மூன்ருறேழ் குறுகும்" எனக்கூறி யமைந்தாரன்றி, நான்கன் முதலுக்குக் குறுக்கம் கூறிற்றிலர். எனவே, நானூன்கென்பதே பண்டையோர் கொண்டதென்பதும், நந்நான்கென்பது (இலக்கண) நூலாதர வற்ற பிற்கால வழக்காதலின் உரையிற் கொண்டமைக்கப் பெற்றதென்பதும் தெளிதலெளிதாம்.

இனி, 'புறனே' என்றது உள்ளுணர்வுசுட்டும்புறக்குறியை; தத்தம் தனிநிலையில் புறத்தே புலனுகாது, கருத்தால் வகுத் தெண்ணும் எண்ணான்கு பொருளினின்றும் புறத்தே நானூன் காய்த் தொக்குப் புலனுகும் மெய்ப்பாட்டுவகை பிரித்தலின், புறனே என்பதின் ஏகாரம் பிரிநிலை; அன்றி இசைநிரப்பும் அசை எனினும் அமையும். " எண்ணான்கு பொருளும் நானூன், கென்ப" எனவே, எண்வகை என்பது பெறப்படு மாதலின் "கண்ணிய புறனே நானூன்கு" என இடைப்புணர்த்துரைப்பா னேன்? எனின், கூறுதும். உள்ளத்து உணர்ச்சியளவில் தனிப் பிரித்து ஒருங் கெண்ணப்படும் முப்பத்திரண்டு பொருளும், புறத்தே மெய்ப்பாடாய்ப் புலனுதல் கொண்டே அறியப்படுத லானும், அவ்வாறு புலனுங்கால் அவை தனித்தனியே எள்ளற் குறி, இளமைக்குறி, பேதைமைக்குறி, மடமைக்குறி, என்றுவ் வொன்றும் வெவ்வேருய்த் தனக்குரிய தனிக் குறியாற் ருென்றுமல், நந்நான்காய்ப் பண்ணைகூடி, நகை—அழுகை—இளிவரல்—மருட்கை--அச்சம்--பெருமிதம்--வெகுளி—உவகை எனும் எட்டு வகையால் மட்டும் தோன்றுதலானும், இவ்வியல்

நெறிகுறித்தல் வேண்டிஇவ்வாறு கூறப்பட்டதென்க. இன்னும் இச்சூத்திரம் சுட்டுவது இதுவே யென்பது, பின்னும் செய்யுளியலில் தொல்காப்பியரே அதன் உறுப்பாம் மெய்ப்பாட்டின் தன்மையை விளக்கியபின் அதையடுத்து "எண்வகை யியனெறி பிழையா தாகி, முந்துறக் கிளந்த முடிவின ததுவே" எனக் கூறுதலானும், அதன்கீழ்ப் பேராசிரியரும், "மேற் கூறப்பட்ட மெய்ப்பாடே இது; அவை நந்நான்காம்" என உரைப்பதானும், வலிபெறும். இனி, என்ப என்றது பிறசூத்திரங்களிற்போல இயற்றமிழ்ப் புலவர் கொண்ட அடிப்பட்ட தமிழ்ச்செய்யுள் மரபிதுவென ஈண்டுச் சுட்டுவதன்றி, யாதாம் வேறு ஒரு முதனூலும் அதன் கொள்கையும் குறிப்பதன்று. இச்சூத்திரப் பொருள் இதுவே யென்பது, இதன்கீழ் இளம்பூரணர் தரும் குறிப்பானும் தெளிவாகும். அவர் குறிப்பாவது "முப்பத்திரண்டாவன: நகை முதலானவற்றுக் கேதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டீறாக முன்னெடுத் தோதப்படுகின்றன" என்பதாம்.

இச்சூத்திரத்தின் செம்பொருள் இதுவாகவும், பேராசிரியரும் பிறரும் தமிழ்மரபும் சொற்குறிப்பும் முரண உரைகூறி மயங்கவைப்பர். பேராசிரியர் "சுவைப் பொருளும் அப்பொருள் விளக்கும் சுவையுணர்வும், அவ்வுணர்வால் தோன்றும் உள்ளக்குறிப்பும், அக்குறிப்பின்வழி உடம்பின்கண் வரும் வேறுபாடாம் விறலுமாக நான்கெண்ணி அவற்றைச் சுவையெட்டோடும் கூட்டி ஒன்று நான்கு செய்துறழ, முப்பத்திரண்டாம் என அநுமானிப்பர். இன்னும் "பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்" என்பதற்கு, "நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காம நுகரும் இன்பவிளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும்" எனப்பொருள்கூறி "கண்ணிய புறனே நானான்கென்ப" என்பதற்கு "அவை கருதிய பொருட்பகுதி பதினாறாகி யடங்கும், நாடக நூலாசிரியருக்கு," என முடிப்பர். இதில் பொருள் முப்பத்திரண்டென ஒருங்கெண்ணிய பிறகு "அவை கருதிய பொருட்பகுதி" எனப் பிரித்துச் சுட்டுமாறென்னை? பொருள்கள் கருதிய பொருட்பகுதி என்பது பொருளில் வெற்றுரையாகும். மேலும், எண்ணான்கு பொருளும் ஓராங்கே ஒருங்கெண்ணப்படுதலின், அவை ஒருதரப் பொருளாதல் ஒருதலை. அதற்கு மாறாக அவற்றை, சுவையூட்டும் புலி முதலிய புறப்பொருள்வேறு, அப்பொருள் விளக்கும் உணர்ச்சிவகை வேறு, உணர்ச்சியால்

எழும் உள்ளக்குறிப்பு வேறு, அக்குறிப்பால் நிகழும் உடற்குறியாம் விறல்வேறு எனத் தம்முள் ஒவ்வா நால்வகை உறழப் பிரித்தல் இங்குத் தொல்காப்பியர் கருத்தாமாறில்லை. அன்றியும் எண்ணான்காமவை கண்ணிய புறனே எண்வகை யியனெறி ஆவதை விட்டு, பதினாறுவதெப்படி? புறப்பொருளும் அகவுணர்வும் ஒன்றுமேல், உணர்வெழுப்பும் குறிப்பையும் அதனுடன் நிகழும் விறலையும் வேறுபடுத்துவானேன்? அன்றியும் உணர்வூட்டும் புறப்பொருள் ஒன்றும் இல்லாமலே எண்ணியாங்கே மெய்ப்பாட் டுணர்வுகள் உள்ளத் தெழுமாதலின், எண்வகை மெய்ப்பாடுகளை எனைத்துவகைப் புறப்பொருள்களொடும் கூட்டவும் பெருக்கவும் வேண்டா.

இனி, தொல்காப்பியர் இங்குத் தான் விளக்குவது இயற்றமிழ்ச் செய்யுளுறுப்பன்றிக் கூத்துறுப் பொன்று மன்றாதலின், அவற்றைச்சுவையெனவும் விறலெனவும், கூத்தியற்சொற்களால் யாண்டும் குறியாமல், மெய்ப்பாடெனவே கூறிப்போந்தார். அன்றியும், புறக்குறியாற் புலனாகும் மெய்ப்பாட்டுணர்வெல்லாம் நந்நான்கும் எவ்வெட்டுமாய்ச் சேர்ந்தே தொகுதியாக இயனெறியாற்றோன்றி வகை பெறுதலான், அவற்றைப் 'பண்ணைத் தோன்றிய' எனச்சுட்டினார். தொல்காப்பியரின் இக்குறிப்புக்களைக் கருதாமல் உரைகாரர் இதில் 'பண்ணை' என்பதை மகளிர் விளையாட்டெனக் கொண்டனர். அதனாற் பிறமொழிக் கூத்தியற் கொள்கைகளை இதிற்புகுத்தி இடர்ப்படலாயினர். இன்னும், அகப்புறப் பொருட்டுறையனைத்திற்கு முரிய இயற்றமிழ்ச் சான்றோர் செய்யுளுறுப்பாவன மெய்ப்பாடென்பதை மறந்து, அவை "நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காம நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும்" எனப்பேராசிரியரும், 'ஈண்டுச் சொல்லப்படுகின்ற பொருளும் கற்று நல்லொழுக்கு ஒழுகும் அறிவுடையார் அவைக்கண் தோன்றுமையால் "பண்ணைத்தோன்றிய" என்றார்' என இளம்பூரணரும் மயங்கக் கூறினர். மேலும் உரைகாரர் கூறும் கூத்துநூற் குறிப்புக்களே தொல்காப்பியர் இதில் கூறக் கருதின், அவற்றை எனைத்தளவும் குறியாமல், வாளா "எண்ணான்குபொருளும் நானான் கென்ப" எனக் குன்றக்கூறிக் கற்பவர் பொருளறியாமல் மயங்கவைப்பரா?

அன்றியும், இவையெல்லாம் ஆரிய நாடக நூலார் கோள்களாதலின் அவை இயற்றமிழ் நூலில் இடம்பெறற்கில்லை. அஃதுவுமன்றி, தன்னூலில் யாண்டும் எனைத்தளவும் சுட்டாமலே,

அயன்மொழிப் பிறநூற் குறிப்புக்களை அறிந்தன்றிக் கற்பவர் பொருளறியாவாறு தடுமாற இயற்றமிழ் நூற் சூத்திரம் இயற்றப்பட்டதெனல் மருட்கையை விளைப்பதாகும்.

"சூத்திரந் தானே
ஆடி நிழலி லறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே"

எனத் தெளித்த தொல்காப்பியர் தாமே இச்சூத்திரத்தைப் பேராசிரியர், இளம்பூரணர் எனும் இருவரின் விரிவுரை கொண்டும் விளங்காமல் மயங்குமாறு யாத்துவைத்தா ரென்பது கொள்ளத்தகுமா? இதுவுமன்றி இவ்வுரைகாரர் கூறும் ஆரிய நாடகநூற் சத்துவங்கள் தொல்காப்பியர் இயற்றமிழ்ச் செய்யுளுக்குக் கூறும் மெய்ப்பாட்டுணர்வுகள் ஆகா. இதனைப் பின் மெய்ப்பாட்டு வகை விளக்கும் சூத்திரத்தின் கீழ் விரித்துக் காட்டுதும்.

இனி, எண்ணான்கு பொருளும் பின் "எள்ளல் முதல் விளையாட் டீறாக வரும் முப்பத்திரண்டுமாம்" எனக் கண்டு கூறும் இளம்பூரணரும், "நானான் கென்ப" என்பதற்கு அம் முப்பத்திரண்டுமே நந்நான்காய் எண்வகை பெறும் என்னாமல், சுவையும் குறிப்பும் ஆகப் புறத்து நிகழும் பொருள் பதினாறும் எனப் பொருள் கூறினர்; சுவைகளின் குறியான விறல்கள் புறத்து நிகழுமேயன்றி, சுவைகள் உள்ளுணர்வேயா மாதலின், அவற்றையும் விறல்களுடன் ஒருங்கெண்ணி ஆகப் பதினாறும் ஓராங்கே புறத்துநிகழ் பொருளெனக் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாமை ஒருதலை. ஆதலானும் அது பொருளன்மை யறிக.

(தொடரும்.)

உ

# கொற்று அட்டி ஆளார்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்., சென்னை.

தேவாரப்பாடல்கள் சிலவற்றிற்குப் பொருள் காணு மிடத்துத் திருத்தமான பாடம் இன்னதென்பதைத் தெளிந் தறியாது இடர்ப்பட்டுச் சிறவாதபொருளை வலிந்து கோடலு முண்டு. இவ்வாறு பொருள்காணப்பெறும் பாடல்களுள் ஒன்று சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய,

"திங்கள்தங்கு சடையின்மேலோர் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார்கோற் றட்டியாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே" என்பது.

ஓலைகளிலும் கல்வெட்டுக்களிலும் ஒகர ஓகாரங்கட்கு வரிவடிவில் கொம்பும் காலும் ஒன்றாகவே காணப்படும் (கோ என்றிருக்குமேதவிர கோ என்று இராது). "கொற்றட்டியாளார்" என்ற தொடருக்குச் செம்பொருள் காணமாட்டாது சுவாமிநாத பண்டிதரையுள்ளிட்ட பதிப்பாசிரியரனைவரும், "கோற்றட்டி யாளார்" என்ற பாடங்கொண்டு, கோல்தட்டியாளார் என்று பதப்பிரிவினைசெய்து, வீணையைக் கோலினால்தட்டி (அல்லது வீணைக்கோலைத்தட்டித்தடவி) வீணாகானம் செய்வதால், வரும் அடியாரை ஆளாது, தவிர்வார் என்று பொருள்கொண்டனர்.

கல்வெட்டுக்களை யாராயுமிடத்துக் கொற்று அட்டுதல் என்பது சோறிடுதல் என்ற பொருளிற்காணப்படுகிறது. திருவண்ணா மலைக்கல்வெட்டொன்றில் (S. I. I. Vol 8- No. 68) "கார்த்திகைத்திரு நாளிலும் பங்குனித்திருநாளிலும் திருவண்ணாமலையுடையாரைச் சேவிக்கவந்த சிவயோகிகள் உள்ளிட்ட அடியாரை ஊட்டுக என்றும் புறத்தடியார்க்குக் கொற்றட்டுக என்றும் இத்தேவர் தேவ தானம்" என்பது காணப்படுகிறது. "கொற்று" என்ற சொல் உணவு என்ற பொருளில் வேறு பல கல்வெட்டுக்களிலும் வருகிறது. சிதம்பரம் கல்வெட்டொன்றில் "திருநந்தவனஞ்செய்ய முதல்கொண்ட நாயகம்பேர் அஞ்சும் பேர் தொண்ணூற்றஞ்சும் ஆகப்பேர் நூறு இதில் நாயகம் பேர் ஐவர்க்கு கொற்றுக்கு நாள்

ஒன்றுக்குப் பேர் ஒன்றுக்கு முக்குறுணியாக நெல் கலனே முக்குறுணியும் தொண்ணூற்றறைவர்க்குக் **கோற்றுக்கு** நாள் ஒன்றுக்குப் பேர் ஒன்றுக்கு நெல்பதக்காக நெல்பதினைங்கலனே இருதூணிப்பதக்கும் ஆகப்பேர் நூற்றுவர்க்குக் **கோற்றுக்கு** நாள் ஒன்றுக்கு நெல் பதினேழுகலனே குறுணியும் ஆக ஆட்டைக்குடைய நெல்லுக்கும்" என்று ஒரு வருடத்திய நெல் கணக்கு விவரிக்கப் பட்டிருக்கிறது. இச்சொல் இப்பொருளில் வேறுபல கல்வெட்டுக்களிலும் வருகிறது (S. I. I. Vol 8-No 53, 54, 55, 56, etc). **கோற்று** என்ற சொல் அன்றாடவழக்கிலும் உணவு என்றபொருளில் வழங்குவதை "உனக்குக்கொற்று இன்றைக்குக் கலியாண வீட்டிலா?", "நள்ளிரவில் அந்த குக்கிராமம் போய்ச் சேர்ந்தால் கொற்றுக்கு என்செய்வது?", "அவன் கொற்றுக்கில்லாத வெறும்பையன்" என்பன போன்றதொடர்களிற் காணலாம்.

எனவே "தேவியார் அடியேற்குக் கொற்று அட்டியாள மாட்டார்" என்று நம்பியாரூரர் கூறுவதாகக் கொள்வதே சிறந்த உரையெனத்தோன்றுகிறது. அடுத்தபாட்டில் "அற்றபோழ்தும் அலந்தபோழ்தும்....உம்மை ஒற்றிவைத்திங் குண்ணலாமோ" என்றும், அதற்கடுத்தபாட்டில் "வல்லதெல்லாம்சொல்லியும்மை வாழ்த்தினும் வாய்திறந் தொன்றில்லையென்னீர் உண்டுமென்னீர்" என்றும், வரும் தொடர்கள் இவ்வாறு பொருள்கோடலை ஆதரிப்பனவாகக் காணப்படுகின்றன.

இச்சிறு ஆராய்ச்சியைப் பேரறிஞர் திருவடிகட்குச் சமர்ப்பிக்கின்றேன். அன்னார் பழையபாடம் பழையவுரை புதிய பாடம் புதியவுரை ஆகியவற்றைச் சீர்தூக்கி உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்துமாறு விண்ணப்பிக்கிறேன். யாப்பிலக்கணக் கண்கொண்டு காணினும் குறிற்பாடமே ஏற்புடைத்தெனத் தோன்றுகிறதென்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

# தென்னாட்டுக் காட்சிகள்

## திருவரங்கம்

திரு. டி. ஜி. ஆராவமுதன்

நாட்டின் செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் இருப்பிடங்கள் அதன் நகரங்களும் பேரூர்களுமே. ஆயினும் அந்த நாட்டினரது மெய் வாழ்க்கையின் பிறப்பிடங்கள் அதில் உள்ள திருப்பதிகள். தென்னாட்டின் வடபால் வேங்கடமும், தென்பால் இராமேசுவரமும் ஆண்டவனது இருப்பிடங்கள் ஆதல் பற்றி எவ்வளவு பெருமை பெற்றுள்ளனவோ அவ்வளவு பெருமையும் பெற்றதல்லாது அடியார்கள் இடைவிடாது தொண்டு செய்தமையாலும் நாட்டின் உயிர் நாடிகளில் சிறந்த நாடி ஒன்று கிளம்புவதாலும் அவ்விரு தலங்களிலும் பெருமை வாய்ந்துள்ளது திருவரங்கம்.

இது மன்னர் நிலை நின்ற தலைநகர் அல்ல. வணிகர் கொழித்த பட்டினம் அல்ல. ஆற்றின் இடைப்பட்ட மணற் பரப்பில் நாட்டப்பட்ட சிற்றூர். குடநாட்டிலிருந்து ஒருமுகமாய்ப் பாயும் காவிரி இருபிரிவாய்ப் பிரிந்ததால் பெருக்கெடுத்ததும் மூழ்க வேண்டுவதுமான இடத்தில் இருந்தும் அழிவு இன்றி நிலைத் திருப்பதுமல்லாமல், நம்பினோர் பேரின்ப வாழ்வு பெறுவதற்கு அடைக்கலமாய்த் திருவரங்கன் இடங் கொள்ள, அவனிடம் வழிகாட்டத் தொண்டர் பலர் தங்கியிருக்கப் பெறுந் தலமாய் நீடித்திருக்கிறது.

காவிரியின் நடுவே கிடப்பதால் சோலைகள் சூழ, வண்டினம் முரல, மயிலினம்ஆல, குயிலினம்கூவ, பல்வளமும் பொருந்தியது ஆயினும், இவ்வளம் ஒன்றும் இதன் பெருமைக்குக் காரணம் அன்று. இது அண்டர்கோன் அமரும் சோலை. அவன் தொண்டர் தொடர்ந்து வதிந்த சோலை. இவையே இம்மேன்மைக்கு அடிப்படை.

நதியின் நடுவில் பெருந்துருத்தியில் இவ்வாண்டவன் அமர்வானேன்? சத்தியலோகத்தில் பிரமன் தொழுது வந்த அரவணைப்பள்ளியானை அழகிய மணவாளனும் அவனது

விமானமும் அயோத்தி அரசருக்குக்கிட்டி இராமனால் இலங்கை வேந்தன் விபீடணனிடம் சேர, அவன் தென்புலம் எடுத்துப் போகையில் காவிரிநடுவில் வைக்க அங்கேயே அழகிய மணவாளன் தன் விமானத்துடன் ஊன்றினன். குடதிசை முடியை வைத்து, குணதிசை பாதம் நீட்டி, பள்ளிகொண்டு விபீடணனுக்காக மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்க்கண் வைக்க, தென்னீர்ப்பொன்னி திரைக்கையால் அடிவருட, அவன் அரவணைத்துயின்றான். விபீடணன் வாரம் ஒருமுறை வந்து பள்ளிகொண்ட மாயனை வழிபாடு செய்து போவதாக முடிவு செய்துகொண்டு இலங்கை செல்ல, சோழ அரசர் இத்தலத்தைப் போற்றி வந்தனர். வெள்ளத்தால் மணல் கொழித்து மூடிய காட்டை வெட்டி மணல் பறித்துக் கோயிலைத் திருத்திப் பெருக்கி வந்தனர். கோயிலைச்சுற்றி ஆவணத்தின் மேல் ஆவணமாய் ஏற்படுத்தி, மதிள்கள் எடுப்பித்து, பலவகை மண்டபங்களும் கட்டுவித்து, தேவ வகைகள் பலவற்றிற்கும் கோயில்கள் அமைத்து, பள்ளிகொண்டான் கோயிலைத் தேவாதி தேவர்களின் இருக்கை ஆக்கினர்.

இக்கோயிலில், தூராத மனக்காதல் கொண்ட தொண்டர் குழாங்குழாமாகக் குழுமி, எம்பிரான் குணம் பாடி, திருப்புகழ்களும்பாடி, ஆராத மனக்களிப்போடு நினைந்து உருகி, மெய் சிலிர்ப்ப, ஏத்தி, ஏங்கி, இளைத்து நின்று, நட்டமிட்டு, எழுந்து, ஆடிப்பாடி, இறைஞ்சிப் பொன்னிப் பேராறு போல் வரும்— கண்ணின் நீர்கொண்டு இவன் கோயில் திருமுற்றம் சேறு செய்வர். இவனும் அவர்களது ஆடலைக்கண்டு, பாடலைக் கேட்டு, ஆசைப் பெருக்கத்தை உணர்ந்து, ஆனந்தம்அடைவன். ஆகவே, இவன் கோயில் **அரங்கம்** ஆயிற்று. இவனும் **அரங்கன்** ஆயினான்.

இவ்வாறு அரங்கம் ஆயினமைக்கு ஏற்றவாறே இந்தத் தலத்தில் வழக்கங்களும் ஏற்பட்டு வந்தன. திருமங்கையாழ்வார் தாம் இயற்றியருளிய பிரபந்தங்களையும் மதுரகவிகள் நம்மாழ்வாரது திருவாய்மொழியையும் பெருமாள் செவிசாத்தும்படி தேவ கானத்திலே அபினயத்துடன் சேவித்தார்கள். பல காலங்களிலே திவ்ய பிரபந்தம் முழுவதையும் அவ்வாறே கான அபினயங்களுடன் சேவிக்க வேண்டும் என்று நாதமுனிகள் கற்பித்தார். திருமஞ்சனவானை முன்பே நடை கேளிக்கை ஆடுகிறதும், நாள் விழாவிலே மலைப்பு கேளிக்கை, உலா, மடல், அம்மானைகள், தட்டிக் கேளிக்கை, முதலானவை

நிகழ்வதும், பதினெட்டாம் பெருக்கிலே இரசக்கிரீடை ஆடுகிறதும், இளவேனில் விழாவிலே கோலாட்டம் ஆடுகிறதும், வேறு சில காலங்களில் கோலாட்டமும் காலப்பரிகை நாடகமும் தெய்வக் கூத்துக்களும் நடைபெறுவதும் இத்திருப்பதியில் ஏற்பட்டுள்ள மரபு.

அரங்கனுக்கு ஆட்பட்ட மன்னர் அரங்கன் ஊரைக் கொண்ட சோழர் மட்டுமே யல்லர். தமது நகராம் கொல்லியிலிருந்தும் பிறர் நகரங்களாம் உறையூர், மதுரை இரண்டிலிருந்தும் அரசு நடத்திய குலசேகரப் பெருமாளாம் சேரர், அரங்கனிடம் பெரும்பற்றால் தம் மகளை அவனுக்குத் திருமணம் புணர்ப்பித்தனர். தமிழ் நாட்டைச் சுற்றிய எம் மண்டலமும் கொண்டவரான சுந்தரபாண்டிய தேவர் தாம் வென்ற நாடுகளிலிருந்து கொணர்ந்த பொருட் குவியல்களை அரங்கன் திருவடியிலிட்டு, வேண்டி வேண்டி ஏற்க வைத்தும், மண்டபங்கள் பல கட்டி வைத்தும், அங்கி வகைகள் பல சாற்றியும், திருவாசல்கள், தோரணங்கள், விமானங்கள் பலவற்றைப் பொன்னாற் செய்வித்தும் பொன் வேய்ந்த பெருமாள் என்ற சிறப்புப் பெயர் பெற்றனர். தமிழ் நாட்டு மூவேந்தரே அன்றிக் கன்னட அரசர் பரம்பரையில் வீரநரசிங்க தேவர் போலப் பலரும், தெலுங்கப் பேரரசர் விசயநகரத்தாரிற் பெரும்பாலோரும் அரங்கன் திருவடியில் முடி சாய்த்துத் தம் ஆற்றலுக்கு ஏற்றவாறு பெருந் தொண்டுகள் பல செய்தனர்.

ஆழ்வார்கள் பதின்மரும் அழகிய மணவாளனை மங்களசாசனம் செய்திருக்கின்றனர். நாச்சியாரும் திருவரங்கச் செல்வனார் எப்பொருட்கும் நின்று, ஆர்க்கும் எய்தாது, நான் மறையின் சொற்பொருளாய் நின்றார், தன் மெய்ப்பொருளும் கொண்டார் என்று பாடியிருக்கின்றார். பராங்குசன் அல்லால் பரன் இல்லை என்ற கொள்கை கொண்ட மதுரகவியாழ்வார் துதியாமைக்குக் காரணம் அவர் பரமனைப் போற்றிய பராங்குசரே அரங்கனைப் பரம் என்று துதித்து விட்டமையே. கவிதையிற் பெரியகம்பநாடர் தம் இராமகதையை அரங்கேற்றிக் கம்ப நாட்டாழ்வார் ஆனதும் திரு அரங்கன் அருளால்.

அரங்கன் தனது திருக்கோயிலில் பணிவிடைகளை நடத்தி வைக்க ஏற்படுத்தியவர் யாரோ எனில் இந்த நாட்டிற் பிறந்த மார்க்கதரிசிகளிற் பெரியவர் பலர் ஆவர். மதுரகவி ஆழ்வார்

அவர்களில் ஒருவர். நாதமுனிகள் மற்றொருவர். உய்யக் கொண்டாரும் மணக்கால் நம்பியும் ஆளவந்தாரும் பிறர். இவர்களுக்குப்பின்பு வந்தவர் பாடியக்காரரான இராமானுசர். எம்பெருமானின் தத்துவத்தை உணர்ந்து அவன் திருவடிகளைக் கண்டவரான இப்பெரியோர்கள் அந்தஉணர்விலும் காட்சியிலும் ஆழ்ந்தவராய் மெய்ம்மறந்து, அவ்வுணர்வும் காட்சியும் பெறமுடியாத தொண்டர் கோடிகளைக் கைசோர விட்டு விடுவரோ என்று அஞ்சி, தான் கோயில் கொண்டும், அக்கோயிலிற்குத் தொண்டர்களை அழைத்துக் கொண்டு வந்து தம்மிடம் சேர்ப்பிக்கும் பொருட்டு இப்பெரியோரிடமே பொறுப்பைக்கட்டி வைத்தனன்.

கோயில்களில் சீகாரியத்தில் அமர்பவர்களுக்கு ஏற்படும் இடுக்கண்கள் இராமானுசரையும் தொடர்ந்ததால் அவர் விலகித் திருவெள்ளறையில் தங்கியிருந்த இரண்டு ஆண்டு போக, சுமார் அறுபது வருடகாலம் இத்திருப்பதியிலே வாழ்ந்து இக்கோயிலின் திட்டங்களைச் சீர் செய்து, எழுநூறு சீயர்களும் பன்னீராயிரம் ஏகாங்கிகளும், எழுபத்துநான்கு ஆசாரியர்களும் கணக்கில் அடங்காத தாசர்களும் சேவிக்கும்படியாக மேற்பார்வை பார்த்து வந்தனர். அவர் கட்டளையிட்ட திட்டங்கள் வெகு மேன்மையானவை ஆதலால், அவை போன்ற திட்டங்கள் தென்னாட்டுத் திருப்பதிகள் ஒவ்வொன்றிலும் வழக்கில் வந்தன. இவ்வாறு அரங்கன் நல்லதோர் அருள் தன்னாலே உய்பவர்க்கு உய்யும் வண்ணம் திருப்பதி தோறும் காட்டினான் திருவரங்கத்தை. காலப்புரட்சிகளால் அந்த ஏற்பாடுகள் குலைந்து போயும் இன்றும் அவை ஓர் அளவிற்கு நடைமுதலில் இருந்து வருகின்றன. சீர் அழிந்த நிலையிலேயும் இக்கோயில் ஏற்பாடுகள் வியப்பு உண்டாக்குவதால் இராமானுசர் காலத்திலும் அவர் இட்டதிட்டம் கட்டுக் குலையாதிருந்த காலத்தினும் அரங்கனைச் சேவித்தவர் பேறே பேறு.

அணி அரங்கன் அன்பொடு இக்கோயிலில் பள்ளி கொள்வது மண் உய்யவும் மண்ணுலகில் மனிதர் உய்யவுந்தான். சித்தர்களும் பழமொழி வாய் முனிவர்களும் கூட பரமனை வைகுண்டத்திலே கண்டு கொள்ளலாம் என்று எண்ணாது அரங்கத்தில் அரங்கனைத் தொழுது இறைஞ்சுகின்றனர் என்றால் பாமரர்களுக்குக் கோயிலில் பரமனை வழிபடுவதன் அவசியம் விளங்குகின்றதே. டில்லியரசன் ஒருவன் மகள் தன்னிடம் மனம் வைத்ததால், அவளது பிறப்புவளர்ப்பு முதலியவைகளைநோக்காது தன்னிடம்

சேர்த்துக் கொண்டனன். அப்பெண்ணால் தனக்கு டில்லியில் நடந்து வந்தவாறே இன்றும் தினப்படி விடியற்காலத்தில் கோதுமைரொட்டியும் மதுரப்பருப்பும் கிச்சடியானபொங்கலும் கயிலியால் மூடப்பெற்றுவர அவைகளை ஏற்றுக்கொள்கின்றான். பாணர் மரபில் புகுந்து வளர்ந்தவரது பாரமாய பழவினையைப் பற்று அறுத்துத் தன் வாரம் ஆக்கி வைத்ததன்றி அவரை ஆட்கொண்டு, தம் இலச்சினையைச் சாற்றி வைத்து, அருள் கொடுத்திட்டு, தம் முன்பு நேரவே அவரை அழைத்துச் சேர்த்துக் கொண்டனன். உயர் குலத்தார் ஒருவர் பறைச் சேரியை அடைந்து இழிவான துறையில் இறங்கி யிருந்தும் திருவரங்கன்பால் பற்று நீங்காதவராய்ச் சேரியிலிருந்தே பள்ளும் பறையும் இசையுடனே பாட அரங்கன் கேட்டு, தன்னிடம் அவர் தீராத பாசத்தவர் என்று தெளிந்து அவரைப் பரிசுத்தராக்கி, வருடத்திற்கு ஒரு முறை அவர் பாடின பள்ளும் பறையும் தன் முன் இசைத்து வருமாறு நியமித்தான். தன்பால் மீளாத காதல் கொண்டாரது பிறப்பு வளர்ப்பு நோக்காது அரங்கன் தனது இலச்சினையைச் சாற்றித் தூயராக்கித் தன் திருக்கோயிலிற்கு அழைப்பித்துத் தம் பக்கல் சேர்த்துக் கொள்ளும் பேர் அருளாளன் அழகிய மணவாளன்.

வைகுண்டத்திலிருந்து இழிந்து மண்ணும் கல்லும் செம்புமாகி மானிட உரு ஏற்றதால் அரங்கனுக்கும் பிறப்பின் பயன்கள் ஏற்பட்டு இடுக்கண்கள் பல நிகழ்ந்தன. தன்னை வரமாகப் பெற்றிட்ட விபீடணனுடன் அவன் செல்லக்கிடைக்கவில்லை. தன் கோயில் மண்மேடு இடத் தன் முடியில் மண் சுமக்கலாயிற்று. தன்கோயிலை விட்டு நீண்டகாலம் அஞ்ஞாத வாசம் செய்யுமாறு நேரிட்டது. அவன் அரங்கத்தில் இயலும் இசையும் நாடகமும் குன்றி அரங்கம் பொலிவு இழந்த காலமும் உண்டு. ஆயினும், இடர்கள் எல்லாம் நீங்கி இன்றும் அழகிய மணவாளனாய் அவன் விளங்குகின்றான். கலி வலுக்கும் இக் காலத்தும் இவன் திருமுற்றத்தில் பத்தர்களும் பகவர்களும் தொழுது வருவதே இதற்குக் காரணம்.

தென்னாட்டார் வடநாடுகளில் உள்ள தீர்த்தங்களுக்கும் திருப்பதிகளுக்கும் செல்வதுபோல் வடநாட்டார்க்குத் திருவரங்கத்தில் மாயோனைத் தொழுதற்குப் பேரவா உண்டு. தென்னாடும் வடநாடும் தொழ நின்ற தொல் ஆலயங்களில் முதலாயது திருவரங்கம். செந்தமிழின் இன்பப்பாவினையும்

வடமொழியின் இருக்குகளையும் பற்றற்றார்கள் அரங்கன் முன் பயில்வர். இருநாடும் கொள்கையாற் சேர்ந்தும் ஒருநாடு ஆக வேண்டி அரங்கன் அமர்ந்துள்ளான். ஆழ்வார், ஆசாரியர்கள் இதயத்தினூடே ஓடி, சோழநாடு மட்டுமேயன்றி இந்தப் பாரத கண்டத்திலும் அதற்கு அப்பாலும் கிளைத்து விரிந்து உயிர்ப்பிக்கும் உயிர்நாடியாகிய மதம் ஒன்று அரங்கன் திருவடியிலிருந்து கிளம்புவதாயினும் பிறதெய்வங்களைப் பரம் என்று எண்ணுபவர்கூட அரங்கனை வழிபடாது தம் வாழ்க்கை முடிவு எய்த ஒருப்படுவது இல்லை. பிறப்பில் மாறுபட்டோரையும் வளர்ப்பில் வேறுபட்டோரையும் சமயக்கொள்கையில் பிளவுபட்டோரையும் அல்லாது நரம்பு கோணி, மனம் கசந்து, வீண்வாதம் செய்து, ஏழைப்பாமரர் மனதைக் கலக்கி வைக்கும் தீராத வழக்காளரையும் கூட தன்னை அடையச் செய்து பலபடியான வேற்றுமைகளையெல்லாம் மறக்கவைத்து அறநெஞ்சராக்கிப் பொதுநாயகம் பாவித்துப் பேர் அரசு செய்வோன் திருவரங்கன். கோயிலிலெல்லாம் சீரிய கோயிலாய பெருங்கோயிலில், துயர் அகல, சுகம் வளர, ஆள்கின்றான் எம்பெருமான். காலப்பெயர்ச்சிகளால் நாட்டில் மாறுதல்கள் எவை ஏற்பட்டபோதிலும், வினை செய்வான் வினை தீர்ப்பான் என்ற வேற்றுமை ஒன்று உண்டு என்று நம்பியும், வினைக்கு வினையாவது வினை தீர்ப்பான் திருவடியே என்று நம்பியும் அவன் அடியை நாம் பற்றி, பிறர்க்கும் பற்றுக்கோடாக்கி வாழ்வோமானால் திரு அரங்கச் செல்வம் சிந்தாமே மங்காமே பொங்கும்.

# பேரறிவாளன்

[பந்தல்குடி பாரத்வாச மாடபூசி ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

"வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகனெங்கள் தூப்புல்
மெய்த்தவனுத்தமன் வேங்கடநாதன் வியன் கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கொடுவாதியர் மூலமறக்
கற்றவ னென்றுரைத்தேன் கண்டிலேனென் கடுவினையே"

—பிள்ளையந்தாதி.

உலகு அவாம் பேரறிவாளன் உலகுக்கன்பரின் திருக்குலத் தோன்றலான தூப்புல்வள்ளல் ஆரியமெனும் சாகரத்தையும், பாகதமெனும் பவ்வத்தையும் தமிழெனும் ஆழியையும், உல களந்த உத்தமனையொக்கவே ஒக்கக்கடந்து பேரருள்பூத்தபெருந் தகைப்பெருமானாரே இச்சீரார் தூப்புல் திருவேங்கடநாதன். இவ்வொருவர்க்கே திருவரங்கத்தமுதன் வேதாந்ததேசிகர் என்ற தன் திருநாமத்தைத் தானே சாத்தி உள்ளமுவந்தான். இவரது தமிழ் வன்மையும் கவித்திறனும் தமிழ்நல்லுலகு அநுபவிக்க வேண்டுவது முறையாகலின் அவற்றைச் சற்று விளக்குவாம்.

தமிழினிடத்து இவருக்குள்ள அன்பு இணையற்றது. தற்போது "தேசிகப்பிரபந்தம்" என வழங்கிவருவது உண்மையில் தேசிகமாலையே. இம்மாலையில் இப்பேராசிரியர் "பாவளருந் தமிழ்"; "செந்தமிழ்"; "செய்யதமிழ்"; "பண்ணமருந்தமிழ்"; "தூய்யதமிழ்"; "சந்தமிகுதமிழ்"; என்று கொண்டாடுவதி லிருந்து இவரது தமிழபிமானம் இத்தன்மைத்து என்பது நன்கு தெளியலாம். இவர் தம்மைச் "சந்தமிகு தமிழ் மறையோன்" எனக் கூறிக்கொள்வதின் நீர்மை உணரற்பாற்று.

திருவரங்கத் திருப்பதியைக் குறித்து இம் மறைமுடித் தேசிகனார்,

"ஆராதவருளமுதம் பொதிந்தகோயில்
அம்புயத்தோனயோத்திமன்னர்க்களித்தகோயில்
தோராத தனிவீரன் தொழுதகோயில்
துணையான வீடணற்குத் துணையாங்கோயில்
சேராதபயனெல்லாஞ் சேர்க்குங்கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்தகோயில்
தீராத வினையனைத்துந் தீர்க்குங்கோயில்
திருவரங்க மெனத்திகழுங் கோயில்தானே"

எனப் பாசுரமிட்டு மகிழ்கிறார்.

வடவேங்கடத்தைப் பாடியுள்ள இருமாமறை புரந்த இப் பேராசிரியரின் திருப்பாசுரம் வருமாறு:—

" கண்ணனடியிணை யெமக்குக்காட்டும் வெற்புக்
கடுவினையரிரு வினையுங் கடியும்வெற்புத்
திண்ணமிது வீடென்னத்திகழும் வெற்புத்
தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும்வெற்புப்
பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற்பென விளங்கும் வேதவெற்பே"

எம்பெருமான் அபயமளிக்கும் அபாரகருணாநிதி என்றும், நம்மை என்றுங் காத்தளிப்பவனென்றும், அவ்வள்ளலாரின் பரமகிருபையே அவனுடைய கைங்கரியமாகிறபரமபலத்திற்கு உபாயமென்றும், இங்ஙனம் உபதேசிக்கும் குருக்களின் திருவடிகளின் கீழே யாமிருப்போம் என்றும் பொருள் விளங்கும் தீங்கவியைக் கேண்மின்.

" மூவுலகுந்தன் பிழையைத் தானேசாற்ற
முனிவர்களுந் தேவர்களு முனிந்தவந்நாள்
தாவரிதாயெங்கும் போய்த்தளர்ந்து வீழ்ந்த
தனிக்காகந்தானிரந்த வுயிர்வழங்கிக்
காவலினி யெமக்கெங்குங் கடனென்றெண்ணிக்
காணநிலையிலச்சிணையன்றிட்டவள்ளல்
ஏவல் பயனிரக்க மிதுக்காறென்றோதும்
எழிலுடையாரிணையடிக் கீழிருப்போம்நாமே".

"தேசிகனென்னுமாசான்" என்பர் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள். "எம்பிரான் பேசுபயவேதாந்ததேசிகன்" என்பர் அழகர்பிள்ளைத் தமிழாசிரியர். தேசிகமாலையைத் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளியலாம். சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம், குருபாதமே துணை.

" வினைகாளுமக்கினிவேறோரிடந்தேட வேண்டுமெனச்
சினமேவிமுன் போற்சிதைக்கும் வகையிங்கரிது கண்டீர்
எளிதிலி ராமாநுச முனியின்னுரைசேருந்தூப்புல்
புனிதரென் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே"

—பிள்ளையந்தாதி.

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

## உ௰௪-ஆம் ஆண்டு விழா—பிரமாதி ஆவணி ௩, ௪.

### தலைவர் முன்னுரை

தமிழ்ப் பெருமக்களே! தமிழ்ப் புலவர்களே! தாய்மார்களே! உங்களுக்கு என் வணக்கம் உரியவாகுக.

தமிழ்த் தெய்வத்திற்குத் திருக்கோயிலெடுத்தது இச்சங்கமாகும். முடியுடை வேந்தர்களால் போற்றப்பட்ட தமிழ், புரப்பாரின்றி வளர்ச்சி குன்றிய காலத்தில் பாண்டி நாட்டில் மதுரைத் தமிழ்ச் சங்கமும், சோழநாட்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் தமிழ்த் தெய்வத்திற்கு உறையுளாயின. மதுரைத் தமிழ்ச் சங்கம் தோன்றியகாலத்துத் துவங்கிய தமிழியக்கம் இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினலே தான் இன்றும் வலுப் பெற்று வருகின்றது. இச் சங்கத்தின் பழைய அடியார்களுள் யானும் ஒருவன் என்பதுகருதி என்னை அழைத்தீர்கள் போலும். சோணாட்டுத் தலைநகராய தஞ்சையிற் பிறந்தேன். 'கரந்தை' நாறும் இச்சங்கத்தின் தேனை வாய்மடுத்தேன். பின் ஈழ நாட்டிற் சென்று வாழ்கின்றேன். இவ்வொரு காரணம்பற்றியே யான் அழைக்கப்பட்டிருத்தல் கூடும். 'தமிழவேள்' அவர்கள் அருளிய பாமலையைப் பெற்ற காலத்து என் உள்ளம் அப்பேறு குறித்து மகிழ்ந்தது. ஈழ நாட்டில் யான் செய்துவரும் தினையளவாய தொண்டினை நீங்கள் பனையளவாகப் பாராட்டிய பாராட்டினல் என் உள்ளம் மலர்ந்தது. இத்தகைய பணிக்கு என்னை ஆளாக்கி வைத்தது, நீங்கள் எனக்குச் செய்த பேருதவியாகும். இன்று வந்த பயனல் என்றும் தமிழ்த் தொண்டில் விருப்பமுடையனுவேன். ஆனல் இன்று நடக்கும் சொற்பொழிவுகளின் உரைத்திறனை வறையறுத்துக் கூறுபவனல்லேன், 'வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும்' நிலத்தினும் தமிழர் வாழும் வெளி நாடுகளிலும் இச் சங்கத்தின் புகழொளி வீசுகிறது. சென்ற ஆண்டு இச்சங்கம் ஆற்றிய வெள்ளிவிழா தமிழக வரலாற்று நூலில் வரையும் பெருமை யுடையது.

இது தமிழ் வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகள் மிகப் பல. பாரத நாடு அடிமைத் தொண்டிலிருந்தும் நீங்க எண்ணிய

காலத்து, இத் தமிழ்நாடு பல பேரரசர்களை உடையதாய் இருந்தது; பல கலைகளைப் பெற்றது, என்றாங்கு நம் பெருமை களை நினைத்த பின்னர் தான் இந்நாடு உயிர்பெற்றதென்னலாம். எமது நாடு, மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றின் மதிப்பு மிக்கெழுந்த காலத்தேதான் யாமும் உயர்ந்தவராவோம். தமிழ்மொழி, பண்டைக் காலத்து அடைந்த சிறப்பு முதலிய வற்றை விரிக்கிற் பெருகும். எம் மொழிக்கும் பழமையும் சிறப்பும் தனித்தியலும் தனித் தன்மையும் பிறசிறப்புக்களும் ஆகியவற்றை வற்புறுத்தியது இக் கரந்தைத் தமிழ்ச் சங்கமே. சில நொதுமலாளர் சில காலத்துக்குமுன் தமிழ் வடமொழியிற் பிரிந்தது எனச் சொல்லியாங்கு இன்று சொல்ல இயலாதபடி, பண்டைக் காலத்தே மக்களுக்கு நாகரிகத்தை ஊட்டியது தமிழ் மொழியேஎன ஆங்கிலப் புலவரும் கூற முன்வந்துளர். யூத வகுப்பைச் சேர்ந்த வடமொழி யறிந்த புலவரொருவர் "நான் பலமொழியும் சமய நூலும் ஆராய்ச்சியோடு படித் துள்ளேன்; ஆனால் மக்களைக் கடவுளோடு சார்த்துவதில் தமிழ்மொழிப் பாசுரம் போல் வேறு எம்மொழியினும் உயர்ந்த பாசுரங்களைக் கண்டதில்லை" என்றுரைத்தார். யான் இலண்டன்மாநகரம் சென்றபொழுது என்னை உசாவிய புலவர் களும் இலங்கையில் எங்களோடு உசாவவந்த ஆங்கிலப் பேரறிஞர்களும் தமிழில் உள்ள திருவாசகம் முதலிய திரு முறைகளையும், சித்தாந்த சமய சாத்திரங்களையும் திருக்குறள் முதலிய அறநூல்களையும் சிறப்புமுறையிற் பாராட்டக் கண்டு பெருமகிழ்ச்சி யடைந்துள்ளேன். அப்பெருமையுடைய மகிழ்ச்சி தமிழ்க்குடியிற் பிறந்த காரணத்தாலன்றோ, என் போன்றார்க்கு எளிதிற் கிட்டுவதாயிற்று. அதுகொண்டு தமிழ ராவார் ஒவ்வொருவரும் தம் தாய்மொழி தமிழ் என்று சொல்லிக்கொள்வதில் பெருவிருப்பு உடையராயின் தமிழ்நாடு மிகவிரைவில் முன்னேறுமென்பதில் ஐயமில்லை.

ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த சின்னங்களால் பரத நாட்டிற்கு உயர்ந்த நாகரிகம் தந்தது தமிழ்க்கலையே என்பது வலிபெற்றது. பிராகூய் மொழியால் ஏழாயிரம் ஆண்டுகட்கு முந்தியது தமிழ் என்பதை யாவரும் அறிவர். வரலாற்று ஆசிரியராகிய வின்சன் சுமித் (Vincent Smith) என்பார், "தென் னிந்திய வரலாறு ஒன்றுமே ஆய்தற்குரித்து" என முதற்கண் கூறித் தமது வரலாற்று நூலினைத் தொடங்குவர். முதன் முதலில் இவண் வந்த ஆங்கிலேயர் வடமொழியையமட்டுமே

கற்று ஆய்ந்தனர். அவர்கள் முதலில் தமிழைக் கல்லாமையால் தமிழ்த் தொன்மையும் சிறப்பும் அவர் ஆராய்ச்சியிற் பதியாவாயின. ஆனால் இப்பொழுதுள்ளார் தமிழ்க்கலை நாகரிகத்தை அறிந்துவருகின்றமையால் இறும்பூதெய்துகின்றோம்.

சிவஞானபோத ஆசிரியர், ஐம்புலவேடரால் அயர்ப்புண்டு இருந்த ஆன்மா பின் தன் தூய உருவான இறைவன் வழிப்பட்ட பேரின்பம் தனக்கு உண்டென உணர்ந்து இறைவனைச் சார்கின்றதெனக் கூறியாங்கு, வேற்றுமொழியைத் துணையெனக் கருதி அறியாமை வாய்ப்பட்டுத் தமிழர் மயங்கிய காலத்து இச்சங்கத்தின் தோற்றமே அவர் தம் மயக்கத்தை நீக்குதற்குத் துணைசெய்கின்றது என்பது உறுதி. தமிழ் தனித்தியல்வது, கலைபல மிக்கது, பலநிலம் பரவியது, தெளிவும் எளிமையும் உடையது.

தமிழர்களின் திட்டமும் மொழியும் உழைப்புமே இலங்கை முதலிய வெளிநாடுகளை அடைந்து அவற்றைச் சீர்மைப்படுத்தினமை கண்கூடு. இன்றும் அந்நாடுகளில் தமிழ்க் கல்வெட்டும் பாக்களும் உரிய பழைய நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுள்ளன. இந்நாளில் நம்மை இருட்படலம் மூடியுளது. ஒரு காலத்து இறைவன் அடியார்களும் பின், சேக்கிழார் கம்பர் முதலிய புலவர்களும், அதன்பின் சிறுகாப்பியம் புனைந்த புலவர்களும் தமிழ்மொழியைப் போற்றி வளம்படுத்தினார்கள். ஆங்கிலேயர் புகுந்தபின் மக்கள் தமிழை மறந்தனர். இயலிசை நாடகம் ஒழிந்தன. ஏதோ நம் நல்வினையாலே தமிழன்பும் முயற்சியும் மக்கள் பெற்று வருகின்றார்கள். என்றாலும் ஞாயிற்றின்முன் பேரிருட் பரப்புப்போல இப்பொழுது நம்மைமூடியுள்ள பேரிடர்களும் விரைவில் ஒழியுமெனக் கருத இடமிருக்கிறது.

தமிழர் ஆட்சி இல்லாமற் போனதினாலன்றோ இன்று தமிழ்வளங் குன்றியது? மாநில அரசியலாட்சி நடைபெறும் இக்காலத்தும் தமிழ்மொழி முதலிடம் பெறுவாறு சிலர் வேற்றுமொழி புகுத்துவதுகுறித்து தமிழர் கவல்வது இயல்பே. என்றாலும் தமிழுக்கு இயல்பான பேராற்றலும் புகழும் உண்டு. அது வேறொன்றால் கெடாது. ஆனால் தமிழர் விழிப்பாயிராமல் தமிழ் கெடாது எனச் சொல்லிச்சும்மா இருந்துவிடுவார்களாயின் அதன் வளம் எவ்வாறு வளரமுடியும்? ஆங்கிலநாட்டு மக்களிடம் சேகப்பிரியர் நாடகமும் ஏகாதிபத்திய ஆட்சியும் ஆகிய

இரண்டுள் எது வேண்டற்பாலது என வினவின் அதற்கு விடையாக **செகப்பிரியர்** நாடகமே தமக்கு வேண்டுமென மொழிவர். இறைவன் ஆற்றல் ஒலியுருவாகவே வெளிவருவது என்பர் சமயவாதிகள். ஒரு நாட்டாரது மொழியே அவரது உயர்நிலையைப் புலப்படுத்தும் என்பது பலநாட்டு வரலாறு கூறும் உண்மையாகும். ஆங்கிலேயராட்சி இவ் வுண்மையை நன்கு வலியுறுத்தும். தஞ்சைச் சோழர் பரம்பரையினாலே தான் இடைக்காலத் தமிழர் வலிபெற்றனர் என்பது இக்கால வரலாறு கூறும் உண்மை. இராசராசன் இலங்கை முதலான வெளிநாட்டை வென்று அவண் திருமுறை முழங்கும் திருக்கோயில் பல எடுத்து தமிழர் ஓவியக் கலையை வளம்படுத்தினான். தமிழக எல்லைக்கு அப்பாற்பட்ட நாட்டில் சோழ மன்னர் தம் பெருமைப் பெற்றியைப் பொறித்தமைக்கு உறுதுணையாயது நம் தமிழ் மொழியே என்பது உணர்தற்பாற்று. இத்தகைய மொழிப்பற்றினாலேயே தமிழ் மக்கள் உணர்ச்சி ததும்பப் பெற்று உலகம் போற்றும் பெருவீரராயினர். நம் வருங்கால ஆட்சி உயர்வுபெற வேண்டுமானால் அதற்கு உறுதுணையாயது மொழித் தொண்டென்பதில் ஐயமில்லை. ஓர் ஆராய்ச்சியாளர் தென்னாட்டுத் தலைநகரங்களை அகழ்ந்து ஆராயவேண்டும் என்றார். இந்நாட்டிலே தமிழர் தம் ஆட்சியில் உயர்வு பெருதற்கேற்ற தமிழ்மொழிவளர்ச்சியில் ஈடுபட்ட இச்சங்கம் வரவர வளர்ந்துவருகிறது. திருவருளால் இது **கரந்தைச் சங்க**மெனப் பெயர்பெற்றுளது. யாவர் தமிழர் மொழி நாகரிகக் கலைகளைப் பற்றிக் குலைக்கின்றார்களோ அந்நிலையிலெல்லாம் தமிழ்மக்களைத் தூண்டியுய்த்துப் பழப்பெருமைகளை மீட்டுக் கொண்டுவருவது பற்றியே இது **கரந்தைத் திணைக்குரிய** பெயர் பெற்ற தென்பதனை நீங்கள் அறிவீர்கள்.

இச் சங்கம் நிறுவிய தமிழ்க் கல்லூரியைப் பற்றி நினைக்குங் காலத்து நான் பலநாளாய்க் கண்ட கனவொன்றைச் சொல்லுகின்றேன். மொழியிலக்கிய நயம் பாராட்டுவதில் புலவர் முயன்றனர். இனி அது மட்டும் போதாது. கலை, சமய நூல், அறிவியல் நூல் ஆகிய நூல்கள் வளரவேண்டும். ஆங்கில மொழியில் புதுக்கலை அறிவியல் நூல், புதுக் கருத்து முதலியன மிளிர்தல் போன்று இனித் தோன்ற இருக்கும் புலவர் பல நூல்களைத் தமிழ் மொழியில் ஆக்குதல் வேண்டும். சர். **சி. வி. இராமன்** முதலியோர் தோன்றிய தமிழ் நாட்டில் ஏன் புதுக்கலைகள் இயற்ற முடியாது? நம் மொழியில் சிறந்த ஆராய்ச்சி அறிவியல் நூல்களெல்லாம் ஆக்கும் ஊக்கங்கொண்டு வளர்த்தலில்

இக்கல்லூரி முயலுதல் வேண்டும். வித்துவான்கள் பட்டம் பெறுங்காலை அறிவியல் நூல், எண் நூல், சமய நூல், முதலிய சிறப்பு முறைப் பட்டங்களையும் பெறுதற்கேற்றவாறு தமிழ்க் கல்லூரியின் முறை அமைக்கப் பெறல் வேண்டும். ஆங்கிலத்தைத் துணைமொழியாகக் கொண்டு தமிழ் மொழியிற் கலை நூல்கள் இயற்றி அவற்றைப் பாடமாக்கி பல்கலைக் கழகங்கள் பட்டமளிக்க முயலுதல் வேண்டும். அரசியலார் இம்முறையினை மேற்கொள்ளும்வரை இதுபோன்ற தமிழ்க் கல்லூரிகள் இவற்றைச் செய்து வழிகாட்டுதல் வேண்டும். தமிழ் நாட்டுச் சித்தர்கள் முந்நாளில் இரசாயன நூன்முறையில் புலமை பெற்றிருந்தமை உலகம் உணரும்.

நம் தமிழ் மொழியின் இலக்கிய நயம், காவியச் சுவை ஆயவற்றை உலகம் உணரச் செய்வதில் நாம் முயலவில்லை. தமிழ் நயத்தை நாம் உணருவதோடல்லாமல் ஏனைய மொழியாளர்களும் உணருமாறு பிறமொழிவாயிலாகவும் அதனை மொழிபெயர்த்து உதவுதல்வேண்டும். விக்டோரியா மகாராணியார் படிக்கும் புத்தக அறையில் முன் வைக்கப்பட்டது போப்பையரவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள். தமிழ்மொழிப் புலனெறி வழக்கம் போன்ற நன்முறைவேறு எம்மொழியிலும் இல்லை. நம் முல்லைத்திணையின் ஒருபகுதிச் சாயலே, கிரீக், இலத்தீன் முதலிய மொழிகளிலும் மிளிர்கின்றது. ஆனால் ஐந்திணைவளம் முழுதும் பெற்ற தமிழின் சிறப்பு எத்தகையது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அகத்துறைத் தமிழ்ப் பாக்களெல்லாவற்வையும் திரட்டி அவற்றை வெளிநாட்டாரும் உணரச் செய்தல் வேண்டும். இலக்கியம் முதலிய நூல்கள் மட்டும் போதா. உள்ளத்தால் எண்ணப்படுகின்ற அறிவியல், கணக்கு, குறிமுதலாய எண் நூல்களும் இயற்றித் தமிழை வளம்படுத்தல் வேண்டும்.

தமிழகம் யாண்டுமுள்ள தமிழ்ப்புலவீர் எல்லீரும் வம்மின்! தமிழ்த் தெய்வத்துக்குரிய பணிகள் பலசெய்தற்கு வாய்த்த தருணம் இதுவென்றுணர்வீர். தமிழ் மக்கள் தமிழ்மொழி பயிலாது அதனைப் புறக்கணித்தயர்ந்த இருள்கூர் யாமம்கழிகின்றது. பரதகண்டமெங்கும் பரந்திருந்த மாயப்படலம் சிறிது சிறிதாக மறைகின்றது. ஆங்காங்குக் கவிநலமும் கலைநலமும் புத்துயிர் பெற்றுப் புதுமணம் கமழ்கின்றன. ஐரோப்பிய கண்டத்தில் ஏறக்குறைய ஐந்நூற்றாண்டுகளுக்குமுன் கலைப்புதுமலர்ச்சி ஏற்பட்டதினின்று ஆண்டுள்ளமொழிகளெல்லாம் சிறந்தன என்ப.

பரதகண்டத்திற் பயிலும் பன்மொழிகளும் இற்றைக்குப் புதிய ஆற்றல் பெற்றுள்ளன. வங்காள மொழி உயர்நிலை பெற்று விளங்குகின்றது. தமிழ் மொழியினின்றும் பிறந்த ஆந்திர மொழியும் புது நலங்கள் பெற்று வளர்கின்றது. தொன்மை யானும், பிறமொழித் துணையின்றித் தானே இயங்கும் தன்மை யானும், இலக்கண அமைதியானும், இலக்கிய உணர்ச்சியானும் தமிழ்மொழி இக்காலத்து வழங்கும் ஏனைய இந்தியமொழிகள் எல்லாவற்றினும் சிறந்ததென்பது ஒருதலை. தன்னேரிலாத தமிழ்த் தெய்வத்துக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார் இவ்வுதய காலத்துப் புலவர் ஒருவர். தமிழ்த்தெய்வம் துயி லெழுந்து திருவருள் புரியுங்காலம் அணித்தாயது. சங்கப் புலவர்காலத்திலும் சமயாச்சாரியார் காலத்திலும் சேக்கிழார், கம்பர் முதலியோர் காலத்திலும் திருவோலக்கம் கொண்டுவீற் றிருந்த தமிழ்த்தெய்வம் மீண்டும் திருவோலக்கம் கொள்கின்ற காலம் பிறக்கின்றது. ஞாயிறு இந்திரன் திசையை அணு கினன். முத்தமிழ்ப் புலவர்காள் வம்மின்! விசித்திர வன்னங்களுடன் அலர்ந்த மலர்கள் போன்ற கவிகளைக் கொணர்மின், நாடகங்களைக் கொணர்மின், பொருள் பொதி கட்டுரைகளைக் கொணர்மின், புது சாத்திரங்களைக் கொணர்மின், பழஞ் சரிதங்களைக் கொணர்மின், வேற்றுமொழிப் பன்மலர்த் தெரியல்களைக் கொணர்மின். தெய்வத்துள்ளம் கவரும் திப்பிய இசைப் பாக்களை ஓதுமின். ஓவியர்களே, சிற்பிகளே, நீவிரும் வம்மின்! தமிழ்த் தெய்வத்துக்குப் புதுக்கோட்டங்களை எழுப்புமின்! தமிழ் வீரர்களே, வேளைக்காரப் படைகளாக அணிவகுமின். தமிழ்ப் புலவர்களே! நீவிர் முன்னணி புகுமின்! என்னை? ஓர் ஆங்கிலப்புலவர் கூறியாங்குப் புலவர் களாகிய யாமே இவ்வுலகத்தை நடத்துகின்றோம்.

இனிய பல் கீதங்க ளிசைப்பதும் யாங்கள்
 எண்ணில் பல் கனவுகள் காண்பதும் யாங்கள்

தனிமை யாய்த் திரைகடற் றுறைகளிற் றிரிந்தும்
 துறந்த பாழ் யாற்றிடி கரையினி லிருந்தும்

மனித வாழ் வனைத்து முலகினி லிழந்து
 மதி யொளி தவழும் மதியிலே மெனினும்

நனி பட வுலகை நாளுமே யாட்டி
 நடத் துவோ ரம்ம நாங்களே போலும்

தமிழ்த்தெய்வம் வாழ்க! தமிழகம் வாழ்க!! தமிழ்க்கலை ஓங்குக!!!

உ

# வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி

(ஒருசிறுநாடகம்)

சிவ. குப்புசாமி

*தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை*

வரலாறு:— செந்தமிழ் நிறை நீங்காப் புலவருளம்போன்ற பேரியாறும் வரிவண்டுகள் மொய்க்குந் தாமரைப்பொய்கையும் ஆம்பலுங் குவளையு மணக்கும் ஓடையும் கயலொடு கெளிறும் வராலொடு வாளையும் பயிலும் ஏரியும் செறிவுறப் பொருந்தி, விதைத்தனயாவும் விளைவுமீக்கூர வளம்பெறுதலால், மக்கள் கல்வியுஞ்செல்வமும்பெற்றுப் பகையும்பிணியுமின்றி, இசைபட வாழுதற்கிடனாய பாண்டி வளநாடு, கன்னித்தமிழைக்கவின் பெறவுயர்த்தி, புலவர்பொருளுரைபோற்றி, செந்நெறிப்படரும் செல்வரைமிகுத்து, மன்னரனைவரும் மாண்புறு வாழ்க்கை நடாத்தற்கேற்ற திருவளர் செந்தமிழ்நாடாய்த்திகழ்ந்தது.

அந்நாட்டின் ஒருபால் தொல்குடிப்பிறந்தவனாய் இரப்ப வரறியாம லுவப்பனதரூஉம் ஈகையனாய், கற்றாரை வழிபடும் கல்வி கேள்வியனாய், மன்பதை காக்கும் மன்னனாய், தோலா நெறி, தொடித்தோள் வன்மை, தாவில்சீர்த்தி இவைதன்பா லுடையனாய்த் தோட்டிமலைநாடாண்ட, வள்ளல்-கண்டீரக் கோப்பெருநள்ளி என்பானொருவன் இருந்தான்.

அவன்நாடு, பரிசில்வேண்டிப் பல இடங்களுக்குஞ்செல்லும் புலவர், பாணர், கூத்தர் ஆய இவர்தம் நினைவிற்பலகால்தோன்றி அன்னவர்தம் வறுமைநோய்வாட்டும் வான்மருந்தாய்விளங்கும். மாற்றலர் தமக்கோ கொடியரைக்காயும் கூற்றுவன் நகரெனக் குமுறுறச்செய்யும். அவன்றன் இயல்புணராத அழுக்காறும் அவாவும் பெற்ற ஓர் அயன்மன்னன் தோட்டி. வளத்தைப் பெறத் துணிவுபெற்று, தனது நாற்படையுங்கூட்டி நள்ளிமீது எவினான். காலனும்நடுங்கக் கடும்போர்புரியும் கண்டீரக்கோவோ இவற் கஞ்சுவான்? அபலவன் படைகள்யாவும் கல்முன்சிதறும் காக்கைகள்போல உய்வகை யுணராது முதனாட்போரிலேயே

முதுகிட்டோடின. நள்ளியும் வாகை சூடினன். அவனது திறலுணர்ந்த அனைவரும் அஞ்சினர்: கொடைமடம் பெற்ற நள்ளி படைமடங்கொள்ளான், என்ற சொல்லும் நாடெங்கும் பரவிற்று. நள்ளியும் வள்ளியோர் தலைவனுய் அவன்பாலுற்ற எவர்க்கும் வரையாது கொடுத்து, அறமுறை வழுவாத இசை நிறீஇ, வாழ்ந்து வந்தான்.

இவன் செயலிவ்வாருக, அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியை ஐயந்திரிபுநீங்கக் கற்றுச் சோர்விலாச் சொல் வன்மையும் வேந்தர் மகிழும் பேரறிவுங் கூடியவராய புலவர் வன்பரணர், தன் மனைவிமக்களுடன் பரிசிலாளராய் வேற்று நாடேகினர். ஆண்டு, அவர் கருத்து கைவரப் பெருமையால், கொண்டுசென்ற பொருள் முழுதும் அழிந்துபோக, பின் செய்வ துணராது திகைத்து வாடி, வறுமை நோயுற்ருர். உடுத்த ஆடை ஒட்டுடன் ஒட்டைகள் பெற்று மாசுற்றிருக்க, இளைத்த யாக்கையும் ஒடுங்கிய வயிறும் பெற்றனர் புலவரும் சுற்றமும். வன்பரணர், தம்சுற்றம்சூழ, நலிவுற்ற கால்கள் தள்ளாட நடந்து, ஓரிருண்ட கானடைந்தார்; களைப்பு மிகுதியால் மேற்செல்ல வலியின்றிச் சோர்வுற்றுத் தம்மவருடன் ஆண்டிருந்த ஒரு பலாவின் நீழலிற் றங்கினுர். பலாவின் நீழல் பசிக்குறு மருந்தாகுமோ? என்செய்வது? இறைவனேபுகலெனஎண்ண மிட்டு ஏங்கியிருந்தார்.

அதுபோது நெடிய தோற்றமும் அகன்ற நெஞ்சும் இளமுறுவல்பூத்த முகமுங்கொண்டு, இடையில்வாளும் கையில் வில்லும் இலங்க, கண்டவரஞ்சும் வேட்டுவக் கோலத்துடன் வன்பரணரிருந்த பலாவைநோக்கி, ஒருவன் மதர்த்தநடையுடன் அணுகினன். வேட்டுவனென வெருண்டு, புலவர் அவனைக் கும்பிட்டெழுந்த போது, கையமர்த்தி யிருக்கச்செய்து அவரையும் அவர்தம் மனைவி மக்களையும் அன்புற நோக்கினுன்; உணவின்றி அவர்கள் வாடிக்குழைவதையும் உணர்ந்தான். தன்னுடன் போந்த பணியாளர் யாவரும் வழிதப்பிப் போயின மையால்,அவன்றன் களைப்பினையுங்கருதாது,தீக்கடைக்கோலால் அனல் மூட்டி, வேட்டையிற் பெற்ற விலங்கின் இறைச்சியை வாட்டித் தந்து, வன்பரணரும் பிறரும் அதனை விழைவுடன் உண்ணச் செய்தான். அமிழ்துபோலவுண்டு கடும்பசியாறிய வன்பரணர், தம்முறவினருடன் அண்மையிலோடிய மலை வீழருவி ஒன்றின் குளிர்ந்த நீரைப் பருகிக் களைப்பு நீங்கப் பெற்ருர்.

பிறகு வன்பரணர் வலியவந் துயிரளித்த வள்ளன்மை யுடையான்பால் விடைபெறக் கருதி முயன்றபோது, அவன் புலவரிடம் 'நான் இதுபோது காட்டகத்துள்ளேனுகலின், தங்கட்கு விரைவில் தருதற்குற்ற உயரிய பணிகள் வேறொன்று மில்லேன்; இவற்றை அன்புடன் கொண்டு மகிழ்க' என இனிமைபயக்கப் பேசி, தன் மார்பிலணிந்திருந்த முத்து மாலையையும் கையிலணிந்துள்ள கடகத்தையும் கழற்றிக் கொடுத்தான். என்னே, அவன்றன் கொடைத்திறன்!

பணிகளைப் பெற்று இறும்பூதும் மகிழ்ச்சியுங் கொண்ட புலவர் பெருமான், கொடுத்தவன் யாவனென அறியமுயன்றன ராயினும், பெயரும் புகலாது, ஊரும் உரையாது, புன்னகை எழுப்பி, விரைவினிற் போயினுன் அவன்.

புலவர் வந்தவன் யாவனென வுணரக்கூடாமையாற்கவன்று, வழிவந்தார் யாவரிடமுங் கேட்டு, அவன், "கண்டீரக்கோப் பெருநள்ளி" என்னும் மலைநாட்டுமன்னனே யாவன் என அறிந்து மகிழ்ந்து, அவனது கொடை மேம்பாட்டினையும் உயர்ந்த பண்பினையும் புகழ்ந்துபாடி, அவனைச் சிறப்பித்தார். நள்ளியும், கற்றூர் கொண்டாடப் பெரும்புகழ் பரப்பி, தலைமை பெற்ற கொடையாளருள் முதல்வனுகத் திகழ்ந்து வாழ்ந் திருந்தான்.

நலம்!

## இயல்-௧—காட்சி-௧

உறுப்பினர் :—திருகூத்தன், பூங்குன்றன், வீரமாதேவன், துணைவர்கள்.

இடம் :—தோட்டி மலைப் புறநகர்.

காலம் :—மாலைப்போது.

[ முருகப்பெருமான் திருமுன்னர், தோட்டிமலை நாட்டவர் தம் தலைவனின் வெற்றி நாடி வழிபடுதல். ]

திருகூத்தன்:—உலகமுய்ய ஒளியுறு பொருளே! மேலவருளத்தின் நிறைவே! நின்பேரருட்டிறனை யாவரே அறிவர். வறிஞன் வானிதியனாகவும், மடையன் மாமதியனாகவும், மண்ணகத்தான் விண்ணுறைவானாகவும் அமைக்க வல்லை, உயர் குடியிற் பிறந்து நல்லதகுதிகள்பெற்ற எம் வேந்தர் பெருமான் நள்ளியைப் போன்றார், நல்வாழ்வின்றித் தாழ்வுற்றுத் துன்பத்தால் தவிக்க, ஏனோ விரும்புகின்றாய்? நினது செயல் வலிமையை உள்ளவாறுணர்வாரைக்கூட அறியவியலாத எளியேன் அதனைப்பற்றிக் கருதுவதாலாவதென் ?

பூங்குன்றன்:—(மலர் தோடுக்கும் கைகளுடன்) பெரும! மக்களாலாவது ஒன்றுமின்றுதான். ஆண்டவனே! எம்மிறைவன் எத்தகைய இடர்ப்பாடுமின்றி வாழ்வானாக! எனநாம் நம் முருகப்பெருமான் திருமுன்னிருந்து உளமாரப்பணிந்து தொழலாமே யன்றிப் பிறிதொன்றும் இயற்றக் கூடுமென எற்குத் தோன்றிற்றிலது.

திருக்கூத்தன்:— பூங்குன்றா! நன்று நின்பேச்சு! நம் வேந்து பகைஞரால் அச்சுறுத்தப்படும்போது நாம் நமது தொழுகையோடு நின்றாற் போதுமோ? நான்முந்தி, நீமுந்தி, என்று மார்பு தட்டி மடிகட்டிப் போர்க்களஞ்சென்று போர்ப்படை தாங்கிக் கடும்போர் புரிய வேண்டாவோ? நான் யாண்டு முதிரப் பெற்றவன்; நீயோ மிக்க இளைஞன், எனினும் வலிமையும் உளத்திட்பமும் கொண்டவன்; அச்சங் கொள்ளாது

கருதுவனவற்றைத் திறம்பட முடிக்கும் பெற்றியனும் ஆவாய்; ஆதலால் என்னைப் போல நீ 'தொழலாம்' எனக் கொள்ளாது உன் உடலால் என்னென்ன செய்ய இயலுமோ அனைவயனைத்தும் தவறாது செய்து நம் நாட்டவர் வாழத் தொண்டு செய்வாயாக.

**பூங்குன்றன் :—** பெரும! நான் தங்களது கருத்துக்கு மாறுநிற்பவன் அல்லன். 'நாடு நலமுற நீ போர் தொடு' என்றால் என் உள்ளம் எல்லையில் இன்ப வாரிதியில் திளைக்கும். நான் ஒருதமிழன்: மறக்குடியிற் பிறந்தவன்: எனது வயிற்றின் பொருட்டு இந்நாட்டைக் காட்டிக்கொடுப்பவன் அல்லன்; தம் பெண்டுபிள்ளைகள் வாழ்வினைப் போற்றிப் பிறருக்குத் துன்ப மாகித்திரியும் நடைப்பிணமும் அல்லேன். இந்நாட்டவரின் உரிமைக்காக எனது சிறிய உயிரையும் வழங்குநிலை வரினும் அதற்கும் பின் வாங்கேன் என்பதை இம் முருகவேள் திரு முன் உறுதி கூறுகின்றேன்.

**திருக்கூத்தன் :—** பூங்குன்ற! உனது தன்னலமில்லாத் தொண்டின் உறுதியினைக் கேட்டு மகிழ்கின்றேன். நீ எல்லா நலன்களும் இனிதே பெற்று மழவர் தலைவனாய் வாழ்க! நின் உள்ளக்கருத்தை யுணர்தற் பொருட்டே யான் இவ்வாறு கேட்டேன் கவலற்க........இன்று நம் நாட்டுப் பெருமக்கள் இவண் எழுந்தருளி நம் முருகப்பெருமான் திருமுன் வழிபட்டு நம் மன்னர்பெருமான் நள்ளியின் பகைவரைப்போரில் வெற்றி கொள்ளும் வகையினை ஆய்ந்து முடிவு செய்யப் போகின்றனர். ஆதலால் நீயும் அவர்களுடனிருந்து நமது நாட்டின் உரிமைப் போரில் ஒரு பங்கு கொண்டு தொண்டு புரிக. அவர்களும் ஈண்டு வருதற்குற்ற பொழுதும் அணுகுகின்றது. வழிபாட்டிற் குரியயாவும் விரைவில் திட்டம் செய்க.

**பூங்குன்றன் :—** பெரும! அவ்வாறே செய்கின்றேன். **(சற்று சேவி மடுத்து)** அதோ! அவர்களும் வருவதுபோற் காணப் படுகின்றதே.

**திருக்கூத்தன் :—** **(யாவரும் அணுக, கைகூப்பி)** வருக! வருக!! பெருமக்களே! யாவரும் வருக! முருகன் திருவருள் என்றும் நுமக்கு அமைவதாகுக **(யாவரும் வணங்குதல்)** நன்று! தலைவ! நம் வேந்தர் நள்ளி அண்ணல், இன்று கொண்டுள்ள முயற்சியின் திட்பம் எந்நிலையிலுளது?

**வீரமாதேவன் :—** கூத்தப்பெரும! நம் அண்ணலின் அருளால் அவர் தொடங்கிய நம் உரிமைப்போர் வெற்றியையே தரும் எனக் கருதுகின்றேன். யாவற்றிற்கும் தங்கள் போன்றாரது நல்வாழ்த்தும் எம் போன்றாரது பணிவோடுள்ள கூட்டுறவு மிக்க தொண்டும் நம் ஆண்டவனின் திருவருட் பெருக்கின் வலியுந்தான் வேண்டும்.

**திருக்கூத்தன் :—** யாவும் இனிதே வந்துறும்: கவலற்க. நம் முருகவேள், என்றும் நம்மைக் கைவிடான். அடியார்களுக்கு எளியனாவதன்றோ அவன் திறம்; எத்துணையளவு துயர் அடுக்கி வரினும் ஒரு நொடிப்பொழுதில் அவை ஓலமிட்டோட அருளுபவன் அல்லனோ நம் அண்ணல்? எதன் பொருட்டும் நாம் அஞ்சவேண்டுவதின்று. அவனருள் நமக்கென்றுமுண்டு.

**வீரமாதேவன் :—** நன்று கூத்த! தங்கள் திருமொழிப் படியே யாவும் உண்டாகட்டும். இனிப் பொழுதுபோக்காது வழிபாட்டினைக் கருதுவோமாக.

**திருக்கூத்தன் :—**நன்று! அவ்வாறே செய்வோம்................ பூங்குன்று! யாவும் இவண் கொணர்க? (**கூத்தரும் குன்றனும் வழிபாடியற்ற, யாவரும் பணிதல்**) அன்பர்களே! நாம் நம் இறைவனை நம்நாட்டின் நல்வாழ்வு கருதி வழிபட்டுவேண்டுவோமாக!

பாட்டு

பூமலி தேவர்நாட் டொருதேவும்
பூவினி லினிதுறை ஒருதேவும்
பானிறை யாழியி னொருதேவும்
பனிநெடு வரையமர் ஒருதேவும்
பேர்மிகு நின்னிசை விழைவோடும்
பேசிட உளமகிழ் நிறைவோடும்
வாசம லரணி திருமார்பா
வள்ளிதே வானைதம் பெருமாளே.

---

காட்சி முடிவு.

---

உ

# பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?

திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழியாசிரியர், போர்டு உயர்கலாசாலை, திருவையாறு.

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 5, பக்கம் 177)

புதன் உரோகிணியைப் பற்றிய வரலாறு ஒன்று இருப்பதாக யான் இதுவரை கேள்விப்படவேயில்லை. ஒருகால், இது 'இல்பொருளுவமை' யாயிருத்தலும் கூடும். இரண்டாவது செய்யுளில் இராவணன் கூந்தலை இடது கையாற் பற்றினமை கூறப்படுகின்றது. மனு நூலுள், கொப்பூழின் மேற்பங்கெல்லாம் தூயவை யெனவும், கீழவையாவும் அல்லனவெனவும் கூறியிருத்தலால், பிராட்டியின் தூயவிடமாகிய கூந்தலை இராவணன் தூயதல்லாத தனது இடதுகையாற் பற்றுதல் மிக அடாதென்க.

இனி, மூன்றாவது செய்யுளில் தொடை என்பதைக் குறிக்குமிடத்து 'மடி' என்னும் பொருள்தரும் 'அங்கம்' என்னும் சொல்லையே ஆட்சியாகக் கொண்டார். இவ்விடத்தின் மட்டுமன்றி வருமிடமெல்லாம் இச்சொல்லையே யாளுகின்றார். சடாயுவொடு போரிட்டு நிலமீதிழியும்போதும், சடாயுவைத் தாக்கும் போதும், பின் விண்வழிக் கொண்டு செல்லும்போதும் இந்த அங்கம் என்னும் சொல்லையே ஆளுகின்றார். தொடையைக் குறிக்கவேண்டிய விடத்தில் மடி யெனக் குறிப்பிடல் அத்தொடைகளான் மடிஉளதாதல்பற்றி என்க. இது, 'அஸ்யஸூத்ரஸ்யஸாடகம் வய' (இந்நூலுக்குத் துணிநெய்து கொடு) என்னும் வடநூல் வழக்குப் பற்றியதாம். எங்ஙனம் நெய்தால் இந்நூல் துணியாகுமோ அங்ஙனம் நெய்து கொடு என்பது அதன் பொருளாம். எங்ஙனம் செய்யத் தொடைகள் மடியாகின்றனவோ அங்ஙனம் செய்யப்படுபவை என்பது. ஆகவே அங்கம் என்னும் சொல் வருமிட மெல்லாம் தொடைகள் எனவே உரையாளரால் பொருள் கொள்ளப்பட்டது.

இங்ஙனம் இராவணன் பற்றுதற்கு முதற் கருவியாயது அவனது ஊழ்வினையே யென்பார் 'காலசோதித:' என்றார் முதற் செய்யுளில். 'கால' மாவது ஊழ்வினைபற்றுதற்குரிய

வரையறைப் பொழுது. இங்ஙனம் ஊழ்வினையாக மாறியவை எவை யெனின், அவன் பெற்ற கையறம் போலும் வசை மொழிகளேயாம். அவை யாவை யென ஈண்டு நாடுவல்.

'கிருதம்' என்னும் ஊழியில், இராவணன், ஒருகால், பனி மலைச்சாரலில் உலாவா நிற்புழி, அங்குப் பெருநோன்பாற்றும் வேதவதி என்னும் வியாழர்வழிப் பிறந்தாளைக்கண்டு, காதல் மிகக் கொண்டு, கொண்டையைப் பற்றினன். அந்நொடி தானே அந்நங்கையின் கையொன்று வாளாகமாறிப் பற்றியகொண்டையைக் கொய்து பறைத்தது. உடனே, இவள் இலங்கை மன்னனை உறுத்து நோக்கி "செறுதீவினையே செல்வமாக் கொண்டோய், நீ இழைத்த கொடுந்தொழிற்குமாறாக இன்னே வசையிட்டு உன்னை எரித்தொழித்திருப்பேன். கொன்னே நோன்பு கெடுமே எனக் கைவிட்டேன். ஆனால், அடுத்த பிறப்பில் யானே நின்னை அடுவிப்பல் அறிதி" என அதட்டிக் கூறித் தன் நோன்பினாற்றலால் ஒரு பெரும் எரியை எழுப்பி, அதனுள் தன் உடலை விட்டாள். அதற்கடுத்த 'திரேதா' என்னும் ஊழியில் இவ்வேதவதிதான் இங்ஙனம் சீதாப்பிராட்டியாராகப் பிறந்தனள் என்பர்.

இலங்கையூர்ப் பொய்கை யொன்றில், தாமரைமலரில், குழந்தை ஒன்றின் கூவொலி கேட்கச் சிலர்போய் எடுத்து வந்தனர். அது செவ்விதாய்ப் பேரழகுவாய்ந்திருந்தமையால், வேந்தன்கைத் தந்தனர். அவனும் வாங்கி வளர்க்கும் நோக்குடனிருக்கையில், குறிகூறுவோர் இக்குழந்தை இங்கிருந்தால் இலங்கை அழியும் என்றனர். மலங்கிய இலங்கைமன்னன் பொலம்பூண் பேழையிற் குழவியைக் கிடத்திப் பொங்குங் கடலிடைப் போகத் தள்ளினன். கடலலைக் கைகள் உந்த வந்துப்பேழை கரையில் ஒருபால் ஒதுங்கியது. வேள்விவேட்க உழத் துவங்கிய சனகமன்னர் அதனைக் கண்டெடுத்து வளர்த்தார் என்பது வெளிப்படையன்றே?

பின்னரொருகால், இராவணன் எப்புல வேந்தரையும், விண்ணவரையும் வென்றுகொண்டு எக்களிப்புடன் மீளுங்கால், அவ்வந்நாட்டு அழகிய நங்கையரைச் சிறைப்படுத்திக் கொணரலானன். அப்போது, அம்மங்கையரெல்லாம் 'ஐயகோ! இவனதடாத் தொழிலுக்கு ஒரு முடிவுமில்லை கொல்!' என அழுங்கி, 'இக்கொடியோற்குத் துடியிடைநங்கை ஒருத்தி வாயிலாகவே கொலைநேரவேண்டும்' என்பதோரடுவசையியம்பினர். அவ்வசை மொழியாவது—

யஸ்மாதே$_3$ஷ பரக்யாஸு ரமதே ராக்ஷஸாதி$_4$ப;l
தஸ்மாத்$_3$வை ஸ்த்ரீக்ருதேனைவ ப்ராப்ஸ்யதேது$_3$ர் மதிர்வத$_3$ம்ll
உத்தர.- ச. 24- சு. 20.

(பொருள் :—) எதனால் அரக்கர் தலைவனுமிவன் பிறருடைமையாயிருக்கும் மடந்தைமாரிடத்தில் இன்பந் துய்க்கின்றானோ அதனாலேயே இப்புல்லறிவாளன் பெண்பால் வாயிலாகவே கொலையினை எய்துவான் என்றவாறு.

'அடுத்தபிறப்பில் யானே நின்னை அடும் படுகொலைக்கு முதலாவேன்' என வேதவதி யிசைத்த வசையும், இன்னணம் ஏந்திழையாரிசைத்த வசையுமாக இரண்டும் சேர்ந்து ஊழாக மாறிப் (பெண்பாலாற் கெடுதல் குறித்துப்) பிராட்டியைப்பற்றி யெடுக்கும்படியாய் இராவணனைத் தூண்டிவிட்டன வென்க. முன்பு, பிருகு, திருமால் தம்மனையை ஒருவி யலமரல் வேண்டும் என்று கூறிய வசைதனக் கேற்பப் பிராட்டியின்பிரிவும் நேரிட வேண்டு மாதலால், அதுவும் இங்கு அற்றம் நோக்கிக் கூடிக் கொண்டது எனக்கூறுதல் மிகையாகாது.

இனி, முதற்செய்யுளில் 'காலசோதி$_3$த:' என்பதற்கு மாறாக, 'காம சோதித:' என்பதோர் சொல் வேறுபாடுகாட்டப் படுகின்றது. 'காமசோதித:' என்பதற்குக் 'காதலால் தூண்டப் பட்டு' என்பதுபொருளாகும். வான்மீகியார் எல்லாவிடங்களிலும் தங்கூற்றாகவும், பிறர்கூற்றாகவும் ஊழ்வினைதான் இராவணன் பிராட்டியைப் பற்றுதற்கு அடியாயிற்று என்று வலியுறுத்திப் போகின்றாராதலின் இச்சொன்மாறுதல் தக்கதன்றாம். எடுத்துக் காட்டாக இரண்டோரிடம் காட்டுவல்.

1. 'ஸகர்ம க்ருதவானேதத் காலோபஹத சேதன: l'
ஆரண்ய .-ச. 49.- சு. 28.

(பொருள்:—) "அந்நிலையிலுள்ளநீ ஊழால்அறிவு கெடுக்கப் பட்டு இதனைப் புரிந்தாய்." எனவும்,

2. அநாத்$_3$ருத்ய துதத்$_3$வாக்யம் ராவண: காலசோதித$_3$;...l
பாலகாண்டம்., ச., 1. சு. 49.

(பொருள் :—) அந்த மாரீசனின் மொழியைத்தட்டிவிட்டு, ஊழால் உந்தப்பட்ட இராவணன்....எனவும் வருவனவற்றால் அறியலாம். விரிவஞ்சினேன்.

மேலும், 'காம சோதித:' என்ற ஆட்சியே சரியான தென்றால், பற்றும்போது (காமம்) காதல் நிகழ்ந்ததாகக் கூறல் வேண்டும். ஆனால், அதற்கு மாறாகக் கடும் வெகுளியே நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுளது.

ஸம்ரக்தநயன: க்ரோதா$_4$த் ஜீமூத நிசயப்ரப$_4$: l

ஆரண்ய., ச., 49., சு. 9.

(பொருள்:—) "கடுஞ் சினத்தால் மிகச் சிவந்த கண் களுடையனுப்க்கருவி கார்முகிலின் பெருகவினுடையான்...."

ததஸ்தாம் பருஷைர் வாக்யைர் ப$_4$ர்த்ஸயன் ஸ மஹாஸ்வன : l

ஆரண்ய,, ச. 49., சு. 20

(பொருள் :—) பின்னர், அவ் விராவணன் பிராட்டியைப் பெருங்குரற்பாய்ச்சி அதட்டிக் கொண்டே........"

க்ரோஸந்தீம் ராமராமேதி ராமேண ரஹிதாம்வனே l
ஜீவிதாந்தாய கேஸேஷு ஜக்$_3$ராஹாந்தக ஸந்நிப$_4$:ll

ஆரண்ய.- ச. 52. சு. 14.

(பொருள் :—) "காட்டில், இராமபிரானின்றி, 'இராம, இராம, என்று கூக்குரலிடும் பிராட்டியைக் கூற்றுவற்கு நிகரான கொடிய இராவணன் உயிர்கெட்டழிவான் கூந்தலிற்பற்றினுன்."

இவை முதலியவற்ருல் அப்போது இராவணற்குக் காதல் (காமம்) இடைந்து, கறுவுதலே முனைந்துநின்றதென்பது கடிதிற் புலனுதும். காதல்நிகழின், இங்குக் கடுஞ்சினமே ஒருதோற்ற மாய் வரும் கூற்றுவனை நிகராகச் சாற்றல்வேண்டா. முன் னெலாம் காதல்நிகழினும், பற்றி யெடுக்கும்போதும், ஏகிய போதும், தனதரண்மனைப் பொழிலகத்துக்கொண்டு வைக்கும் போதும் இராவணற்குச் சினமே மிக்கிருந்த தென்பது வான் மீகியார் தம்வாய்மொழியான் விளங்குகின்றது. காதலுக் குடலாகுமெனக் கடுகிவந்தாற்கு அதுவே ஏச்சுக்குடலாயிற்று. காதலுக்கிட மன்றெனவே கடுஞ்சினமே கால் கொண்டது. கண்ணபிரானும் கீதையில் 'காமாத் க்ரோதோ$_4$ பி$_4$ஜாயதே' (காதலினடியாக் கடுஞ்சினமெழுமே.) என்று கூறியருளியது ஈண்டு நினைக்கத்தக்கது.

இவ்வாருகச் சினமின்றிக் காதலுடன்பற்றி யெடுக்கின், படைத்தற்கடவுளின் வசைமொழி யிருப்பதால், ஒருகால், இவ்விராவணன் தலைகள் சுக்குநூருக வெடிக்கினும் வெடிக்கும். இங்ஙனம் வெண்டாமரையாள் கேள்வன் வெகுள் மொழி யிருப்பதை இராவணன் கூற்ருக வான்மீகியார் விளக்கிய வரலாற்றை எடுத்துரைப்பல்.

ஒருகால், இராவணனுக்குத் தன் கருத்தறிவிக்கும் பிரகத் தன் என்பான் " தங்களுக்கு ஏன் இவ்வளவுதயக்கம்? பேசாமல் சீதையை வலிந்துபற்றிப் புணர்ந்து இன்பந்துய்த்து விட்டால்,

பின் பேச்சேது? மூச்சேது? இவ்வாறு செய்தல் எளிதன்றோ?'' என்றான். அப்போது அவன் "நல்லது தான். ஆனால், எனக்குமரைமிசையார் வசையொன்றுண்டே! என்செய்வேன்!, அதனால் தான் அஞ்சுகின்றேன். அதனைக் கூறுகின்றேன்! கேள்.''

"யான் ஒருகால் அவ் வெண்கண்ணரின் சூழல் நோக்கி விசும்பிடைச் செல்லும் புஞ்சிகத்தலை என்பாளைக் கண்டு, காதல் கொண்டு, அவளாடையைப் பறித்து வலிந்து பற்றிப் புல்லிப் புணர்ந்தேனாக, அவளும் தள்ளாடும் ஒரு தாமரைப் பூப்போல் மெள்ள மெள்ள மலர் மிசையார் மாளிகை எய்தினாள். இத்தீச் செயலைத் தெரிந்துகொண்ட அச்செம்மலும், என்னையணுகி, 'இன்றுமுதல் எவளாவது ஒருமகளை நீ வலிந்துபற்றிப் புணர் வையேல் நின்றலை சுக்குநூறாக வெடிக்கும். இதற்கையமில்லை' என்று ஓர்வசை தந்தார். யான் அஞ்சுதற்கடி இதுவேயாகும்'' என்றான்.

ஒருமுறை, இராவணன் தன்வழியே சென்ற குபேரன் மைந்தனும் நளகூபரனது நன்மனைக்கிழத்தியாகிய அரம்பை என்பாளை 'ஐயோ! நான் நுமக்கு மருகியாவேனே'என மறுத்துக் கூறியும் வெறுக்கப் புணர்ந்தனன். அதனை அன்னவள் தன்னுறு கணவனிடம் முறையிட்டுக் கூறினாள். நளகூபரனும் தன் மெய்புணர்வால் நடந்ததை நாடியுணர்ந்து, அகங்கையில் நீர் கொண்டு "கரிநிறக்கயவன் இராவணன் இனி தன்பாற்காதல் கொள்ளாத ஓர் காரிகையைக் காதன் மீக்கூர்ந்து புணர்ந்து கெடுப்பனேல், இவன்றலையனைத்தும், அப்போதே, எழுபிளவாக வெடிக்க'' எனஓர் கையறந்தங்கிய கடுமொழிகூறினான். இது கேட்டதுமுதல் இராவணனும் தன்பால் நசையிலா நங்கை யரைப் புணரும் விழைவிலனாயினான் என்பர்.

சரி; இதில் ஓர் ஐயம்! என்னை? நாமகள் கொழுநர்தம் வசை முந்தியதா? அன்றி நளகூபரன் வசை முந்தியதா? முந்திய தெதுவோ அது பயனுறுத்தவில்லை என்பது புலனாகின்றதன்றோ? இதில் நளகூபரன் வசைதான் முந்தியதாதல் வேண்டும். ஏனெ னில் இராவணன் பிரகத்தனுக்குக் கூறும்போது நாமகள் கேள்வர்வசையிருப்பதையே எடுத்துக் கூறுகின்றான். நளகூபரன் முதலிய பிறர் வசையுண்மையை அவன் பெரிதுபடுத்தவில்லை. ஏனெனில், பிறஎல்லாக்கடவுளரிலும் ஈகைமொழியருள்வதிலோ, வெகுள்மொழி விடுப்பதிலோ சிறப்பாக வலிமை பெற்ற மலர் மிசைக் கடவுளரின் ஈகைமொழிபெற்று வீறுற்றவன் இவ்

விராவணன். நிகரிலாதாற்றிய நோன்பின் பெருமையே அதற்கடி. ஆதலால், அவ்வெண்கண்ணோர் திட்டுமொழியல்லது வேறு பிறர் வெட்டுமொழியெல்லாம் இவன்பால் எட்டியேபாரா வாம். அதனால்,இவன் அவற்றைப் பொருட்படுத்துவதேயில்லை. இலங்கையை எரியூட்டிப் போந்த இயவுள் இராவணன் பெருமை பற்றிப் பிற குரங்குகட்கு எடுத்துக்கூறும் பெற்றியாலும் இதனை விளக்கலாம். அது வருமாறு :—

> தபஸாதா$_4$ர யேல்லோகான் க்ருத்$_3$தோ$_4$வா நிர்த$_3$ஹேத$_3$பி ।
> ஸர்வதா$_2$ திப்ரவ் ருத்$_3$தோ$_4$ஸௌ ராவணோ ராக்ஷஸாதிப: ।
> தஸ்யதாம் ஸ்ப்ருஸதோகா$_3$த்ரம் தபஸா ந விநாஸிதம். ।

சுந்தா. ச. 59., சு. 3.

(பொருள் :—)" அரக்கர்க் கிறைவனாகிய இவ்விராவணன் தன் நோன்பினால் உலகம் யாவையும் தாங்கினும் தாங்குவான்; அன்றிச் சினவின் இவை யாவையும் சேர்த்தெரிக்கினும் எரிப்பான். இவன் எல்லா வகையாலும் நோன்பால் ஓங்கிவளர்ந்து விட்டான். அப் பிராட்டியை அன்னான் தொட்டக்கால் நோன்பின் வன்பினால்தான் அவனுடல் அழிந்தொழிந்திலது," என்பது.

படைக்குங் கடவுள் தவிரப் பிற கடவுளராயினும், துறவியராயினும், மற்றேவரேயாயினும் வசைகூறின் அது நிரம்பிய நோன்பினாற்றல் வன்பினையுடைய இலங்கை மன்னன்பால் துலங்காப் பயனுடைத்தா மென்பதை இதனால் தெளிந்து கொள்ளலாகும்.

இவ்விராவணன் அம்மலரோர்பாற்பெற்ற அருளின் வலி கண்டன்றே திருமாலும் இந்திரன் தம்மிடம் இராவணனுக்கு இறுதிகாண வேண்டுமென்று குறை யிரந்தக்கால், "யான் இத் திருமாலாந் தன்மையில் அவனை ஒறுத்தலொண்ணாது; ஆயினும், அவனை நானே கொல்வேன். சிறிதுநாள் பொறுத்திரு" என்று தேறுதல் கூறியதூஉமென்க. இதுகொண்டு, நோன்பினாற்றல் நம்மனோரால் நுவலுந்திறத்ததன்று என்பதை நுனித்தறியலாம்.

இனி, காதல் இலதாகவும் கடுஞ் சினம் உளதாகவும் எவ்வாறாயினும் பிராட்டியைப் பற்றல் இராவணற்கு இழுக்கமே என்பதை விளக்கும் பொருள்களும் உள. அவற்றை ஈண்டு எடுத்துக்காட்டல் ஏற்புடையதேயாம்.

பிராட்டியார் தம்மை யிராவணன் எவ்வாற்றானுந் தீண்டலாகாது என்பதற்கு அவனை நோக்கி உரைப்பதைக் கேளுங்கள்.

தத$_{2}$ஹம் த$_{4}$ர்மநித்யஸ்ய த$_{4}$ர்ம பத்நீ பதிவ்ரதா ।
த்வயா ஸ்ப்ரஷ்டும் நஸக்யாஸ்மி ராக்ஷஸாத$_{4}$ம பாபினா ।

ஆரண்ய. ச. 56 சு. 19.

(பொருள் :—) "அரக்கர் தம் கீழ்மகனே, தீவினையாளனாகிய உன்னால் அறம் கடைப் பிடிக்கும் அழகனார்க்கு அற நிலைக் கிழத்தியும் (அறக்) கற்புடையாளுமாகிய யான் அவ்வண்ணம் தொடுதலாற்றகில்லேன்."

கற்புடையா ளாதலின் தொடலாகா தென்பது இதன் கருத்து. இவண் கூறிய இதனாலும், 'ஜீவிதாந்தாயகேஸேஷு ஜக்$_{3}$ராஹ' ('உயிரிழப்பான் கூந்தலிற் பற்றினான்') என்பதனாலும், காவின் கான் முளை "அப் பிராட்டியை அன்னான் தொட்டக்கால் நோன்பின் வன்பினால் தான் அவனுடல் அழிந்தொழிந்திலது" எனத் தொடுதல்தானும் கூடாதென்பதைக் குறிப்பித்தலாலும்,

ப்ரஹ்ருஷ்டா வ்யதி$_{2}$தாஸ்சாஸன் ஸர்வே தே பரமர்ஷய : ।
த்$_{3}$ருஷ்ட்வா ஸீதாம் பராம்ருஷ்டாம் த$_{3}$ண்டகாரண்ய வாஸின ।
ராவணஸ்ய விநாஸம்ச ப்ராப்தம் பு$_{3}$த்$_{3}$த்$_{4}$வா யத்$^{3}$ருச்ச$^{2}$யா ।

ஆரண்ய. ச. 52., சு. 18

(பொருள் :—) 'தண்டகம்' என்னும் காட்டில் வாழும் தொழுதகைத் துறவியரெலாம் பிராட்டி தீண்டப் படுதலைக் கண்டும், அதன் வழியாய், இராவணற்கு எதிர்பாராது அழிவு அணுகியதை அறிந்தும், முறையே துன்பமும் இன்பமும் எய்தினர்; (செய்யுளில், 'ப்ரஹ்ருஷ்டா வ்யதி$_{2}$தாஸ்ச' என்பதற்கு எதிர்நிரனிறையாகப் பொருள் கொள்ளவேண்டும்.) என இராவணன் அழிவான் என்பது கொண்டு துறவோர் மகிழ்வதாலும், சினத்தோடாயினும்—இல்லை—எவ்வாற்றானும் பிராட்டியைத் தீண்டலாகா தென்பது தெளிவாம்.

(தொடரும்.)

உ

# தமிழ்ச் செய்திகள்

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கரந்தைப் புலவர் கல்லூரியை, சென்னைப் பல்கலைக் கழகத்தார் தக்கதென ஏற்குமாறு விண்ணப்பித்ததைக் குறித்து கல்லூரியின் அமைப்பு, நடைமுறை வசதிகள் முதலியவற்றைக் கண்காணித்து வரும்படி, திருச்சிராப்பள்ளி சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திருவாளர், M. நடேச முதலியார் அவர்கள் பல்கலைக் கழகத்தின் சார்பில் 9-9-39-ஆம் நாள் சங்கத்துக்கு வந்தனர். அன்று மாலை 'திருமுருகாற்றுப் படை' எனும் பொருள்பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினர்.

---

உ

# ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் பொன் விழா

## விண்ணப்பம்

திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும், திருக்கைலாயபரம்பரை, திருக்கோவலூர் ஆதீனம், ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளைத் தமிழ் நாடும், தமிழ்வழங்கும் ஏனைய நாடுகளும், சிறப்பாகச் சைவ உலகமும், நன்கு அறியும். அடிகளார்பட்டம் ஏற்று ஐம்பதாண்டுகள் ஆகின்றன. இந்நிறைவுப் பொன் விழாவை வரும் நவம்பர் மாதம் 18, 19 தேதிகளில் திருப்பாதிரிப் புலியூர் மடாலயத்தில் கொண்டாடுவதென்று அன்பர்கள் முடிவு செய்திருக்கின்றனர். உள்ளூர் அன்பர் சிலரைமட்டும் கொண்டு பொன் விழாக் குழு ஒன்று இப்போது அமைக்கப்பெற்றிருக்கிறது. தமிழ் சில்லா ஒவ்வொன்றுக்கும், தமிழும் சைவமும் வழங்கும் பிறநாடு ஒவ்வொன்றுக்கும் அன்பர்களை எடுத்து விழாக் குழுவினை நிறைவிக்க எண்ணியிருக்கிறது.

விழா நாட்களில் உரிய பொருள்கள் பற்றித் தகுந்தவரைக் கொண்டு சொற்பெருக்காற்றுவதோடு, ஸ்ரீமத் ஞானியார் மடாலய வரலாறு ஒன்றும், அடிகளாரது சிறப்பியல்புகளை நினைவு

கூறும் "பொன் மலர்" ஒன்றும் வெளியிட முடிவுசெய்திருக்கிறது. அடிகளாரது இயற்கையறிவு, கல்வியறிவுகளையும், சமய நூல் தெளிவு ஒழுக்க விழுப்பங்களையும், கொண்டலெனப் பொழியும் சொல்லாற்றல் திறனையும், இவ்வறிவு ஆற்றல்களால் பொதுவாகத் தமிழ் உலகிற்கும், சிறப்பாகச் சைவ உலகிற்கும், அடிகளார் செய்துள்ள தொண்டின் பெருமையையும்பற்றி அறிந்த அன்பர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் நினைவுப் பொன்மலரில் இதழ்களாகத் தொடுக்க ஏதுவாகும்.

தமிழ் நாட்டில் வழங்கும் நாள், கிழமை, திங்கள்வெளியீடுகளில் எழுதினால் ஆங்காங்குள்ள அன்பர்கள் பல்லாயிரவர் தெரிந்து கொள்ளவும், அக் கட்டுரைகளைப் பொன் மலரின் கண்ணிகளாகத் தொடுத்துக் கொள்ளவும் வாய்க்கும். மேற்குறித்தபடி எழுதும் கட்டுரைகளையும், விழாக் கொண்டாடும் முறைகள்பற்றி அன்பர்கள் சொல்லவிரும்பும் கருத்துக்களையும், பொன்விழாக்குழுவின் செயலாளர் விடுதியாய "அகத்தியநிலையம், திருப்பாதிரிப்புலியூர்" என்ற முகவரிக்கு அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தமிழ் நாட்டினரும் ஏனைய தமிழன்பர்களும், சைவஅன்பர்களும், இப்பொன்விழா சிறப்பாக நடந்தேறும் பொருட்டுத் தங்கள் தங்களால் இயன்ற உதவி எல்லாம் செய்ய முன்வருவார் என்னும் துணிபுடையோம்.

பொன் விழாக் குழுவினர்

**K.** சீதாராம ரெட்டியார், B.A. B.L., M.L.A.

ராவ் பகதூர் **R. K.** வேணுகோபால் நாயுடு B.A., B.L.

ராவ் சாகிப் **T. R.** சக்ரபாணி அய்யங்கார் B.A., B.L.

செயலாளர்

வைத்ய ரத்நம் பு. வே. தேவராஜ முதலியார் M.D.(s),

தி. கி. நாராயணசாமி நாயுடு

## மதிப்புரை

**தேள்கடி வைத்திய முறைகள்:—** திருப்பாதிரிப்புலியூர் அகத்தியர் ஔடதாலயத்து மருத்துவர் திருவாளர், பு. வே. இராமமூர்த்தி அவர்கள் இயற்றிய மருத்துவநூல். தேள்களின் வகை, அவற்றின் தோற்றம், பிறப்பு, பண்டை நூல்வழக்கு, சிகிச்சை முதலிய செய்திகளைக் கூறுபடுத்தி விளக்கப் பெற்றுளது. மிகவும் பயன் தரத்தக்கது. இதன் விலை ரூ 0—2—6

**சிலம்புச் செல்வம்:—** திருவாளர், சுத்தானந்த பாரதியார் அவர்களால் இயற்றப்பெற்று 'இராமசந்திரபுரம்அன்புநிலைய'த்தினரால் வெளியிடப் பெற்றது. சிலப்பதிகாரமெனும் காப்பியத்தைப் படித்து அதன் நயங்களைக் காணமுடியாதவர் படித்துப் பயன் கொள்ளுமாறு செவ்விய உரைநூலாக யாக்கப் பெற்றுள்ளது. மூலநூலில் காணும் சுவைகள் குன்றாது விளங்கும் வண்ணம் மூலத்தை அடியொற்றி உரை செல்கின்றது. பாரதியார் அவர்களும், அன்பு நிலையத்தாரும் இடையறாது செய்துவரும் தமிழ்த்தொண்டு மிகமிகப் பாராட்டற்பாலது.

உ

## நன்கொடை உதவிய அன்பர்கள்

### சங்கத்திற்குதவிய அன்பர்கள்

இராவ்சாகிபு

| | | | |
|---|---|---|---|
| திரு. K. V. திருவேங்கட முதலியார் அவர்கள் திருவாரூர் | 5 | 9 | 0 |

### கல்லூரிக்குதவிய அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| ,, அ. சா. சண்முகத்தேவர் ,, சாம்பவானோடை | 8 | 12 | 0 |

### ஆண்டுவிழா நன்கொடை

| | | | |
|---|---|---|---|
| ,, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் | 53 | 14 | 3 |
| ,, P. கோவிந்தராசபிள்ளை அவர்கள், பம்பாய் | 2 | 0 | 0 |

### மின்னொளிக்குதவிய அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு. இராதாகிருட்டினநாயுடு அவர்கள் B.A., B.L., | 3 | 0 | 0 |
| ,, V. கோவிந்தசாமி நாயுடு ,, | 2 | 0 | 0 |
| ,, ச. அ. சாம்பசிவம் பிள்ளை ,, | 5 | 0 | 0 |

தமிழ்ப்போழில் சேர்க்கை.

# சென்னை கவர்ன்மெண்ட்.

## ரேவினியு டிபார்ட்மேன்ட்.

சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அடியிற்கண்ட அறிக்கை விளம்பரம் மந்திரி இலாகாதாரால் வெளிவிடப்பட்டிருக்கிறது:—

**சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் 65-ம் நே. அறிக்கை.**

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1939-ம்ஞு ஜுன்மீ 29௳.

(சென்னபட்டணம் 1939-ம்ஞுத்து 8-வது ஆக்டாகிய) புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம்ஞுத்திய சென்னபட்டணத்து ஆக்ட்.

சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக 1939-ம்ஞு ஜுன்மீ 21௳ வெளிவிடப்பட்ட 63-ம் நெ. அறிக்கையிலே புகையிலையை (விற்பனைசெய்வதற்கு வரிவிதிப்பதையும் லைசென்ஸ்கொடுப்பதையும்)குறித்த 1939-ம்ஞுத்திய சென்னப்பட்டணத்து ஆக்டில் கண்ட நிபந்தனைகளின் படி லைஸென்ஸ் பெற விரும்புகிறவர்கள் அனுப்பவேண்டிய அறிவிப்பு நமூனு வொன்று நிர்ணயிக்கப்பட்டது. தயார்செய்யப்பட்ட புகையிலையில் சில்லறை வியாபாரம் செய்பவருக்குங்கூட இதுபிரயோகப்படுகிறதென்றும், ஷ ஆக்டில் கண்ட 3 (1) பிரிவில் உத்தேசித்திருக்கிறபடி, தயார்செய்யப்பட்ட யாதொரு புகையிலையைச் சில்லறையில் விற்கவாவது அல்லது விற்பனைக்காகக் காட்டிவைக்கவாவது எந்த ரூபத்திலாகிலுமுள்ளபுகையிலையை மொத்தமாய் விற்பனை செய்யவாவது மற்றப்படி மொத்த வியாபாரியாகவோ தயார் செய்பவராகவோ தரகராகவோ கமிஷன் ஏஜன்டாகவோ தொழில் நடத்தவாவது விரும்பும் யாதொரு நபர் இந்தநமூனுப்படி சங்கதி தெரிவிக்கவேண்டுமென்றும் இதனுல் பிரசித்தம் செய்யப்படுகிறது.

---

**சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் 67-ம் நே. அறிக்கை.**

(சென்னப்பட்டணம் 1939-ம்ஞுத்து 8-வது ஆக்டாகிய) புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும் குறித்த 1939-ம்த்திய சென்னப்பட்டணத்து ஆக்ட்.

புகையிலை வரிச் சட்டத்தின்படிக்கான விதிகளின் மசோதா வொன்றை பொது ஜனங்கள் தெரிந்துகொண்டு குணதோஷங் கூறுவதற்காக, 1939-ம்ஞு ஜுன்மீ 21௳யுள்ள விளம்பரமொன்றில் கவர்னமென்டார்பிரசித்தம்செய்தார்கள். அது சம்மந்தமாய் பற்பலஅபிப்பிராயக்குறிப்புகள்வந்து சேர்ந்திருக்கின்றன. அவைகளைப்பற்றி கவர்ன்மென்டார் ஆலோசித்து வருகிறுர்கள். வந்துசேர்ந்துள்ள சகல அபிப்பிராயக்குறிப்புகளையும் பரிசீலனை செய்த பிறகு முடிவாய் நிச்சயிக்கப்பட்டபடியுள்ள விதிகளைக் கவர்ன்மென்டார் பிரசித்தம் செய்வார்கள்.

2. இதற்கிடையில், சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக 1939-ம் ௵ ஜூன் ௴ 21உயன்றும் 1939-ம் ௵ ஜூன் ௴ 29உ யன்றும் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளின் ஷரத்துக்களை மறுபடியும் கவனிக்கும்படி கவர்ன்மென்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அடுத்த ஆகஸ்ட்மாதம் முதல்தேதியன்றாவது அதற்குப் பிறகாவது புகையிலையில் வியாபாரம் செய்வதற்காகப் புகையிலைவரிச் சட்டத்தின்படி வேண்டியிருக்கும் லைசென்ஸைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் காலதாமதம் அல்லது கஷ்டம் காரணமாக, புகையிலையில் நடத்தப்படும் விவகாரங்கள் சம்பந்தமாய் எந்த நபரும் எவ்விதமாகவும் பிரதிகூலமாய்ப் பாதகமடையாமலிருக்கும் பொருட்டுச் செய்யப்பட்டுள்ள விசேஷ ஏற்பாடுகளைப் பற்றி ௸ அறிக்கைகளில் விவரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. மேற்சொன்ன அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட படியுள்ள அறிவிப்பு நமூனாக்கள் எல்லாத் தாலூகா ஆபீஸுகளிலும் கிடைக்கும். மொத்தமாகவோ சில்லறையாகவோ விவகாரம் நடத்தும் சகல புகையிலை வியாபாரிகளும் தயார்செய்யும் சகல நபர்களும் சகல தரகர்களும் கமிஷன் ஏஜெண்டுகளும் தங்களுடைய அறிவிப்பு நமூனாக்களைக் கூடியசீக்கிரத்தில் பிரஸ்தாப இடத்திலுள்ள தாலூகா ஆபீசுக்கு அனுப்பிவிடுதல் நலம். அவர்கள் இதைச் செய்து விட்டால், அவர்கள் லைசென்ஸில்லாமல் வியாபாரம் செய்யலாம்.

3. மேற்சொன்னபடி விண்ணப்பம் செய்துகொண்டிருக்கும் சகல நபர்களுக்கும் பிரஸ்தாப வரி விஷயமாய் நிர்வாகம் செய்வதற்காகஅமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் ௸சட்டத்தின்படி அவசியமாயுள்ள லைசென்ஸுக்கான விண்ணப்ப நமூனாவொன்றைக் கொடுப்பார்கள் மேலும் அவர்கள், வேண்டியிருக்கும் லைசென்ஸின் நமூனாவைக் குறித்தாவது விண்ணப்ப நமூனாவைப் பூர்த்திசெய்யும் விதத்தைக் குறித்தாவது வேண்டியிருக்கக்கூடிய யாதொரு தகவலைத் தெரிவிப்பார்கள் அல்லது யாதொரு ஆலோசனையைச் சொல்லுவார்கள்.

4. ௸ சட்டத்தின்படிக்கான விதிகளும் விளம்பரங்களும் பிரசித்தம் செய்யப்படும். அப்போது, ௸ சட்டத்தின்படி வெவ்வேறு அலுவல்களைச் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களைப்பற்றி ௸ விதிகளிலும் விளம்பரங்களிலும் சிரமமாய்ச் சொல்லப்பட்டிருக்கும். ௸ ஏற்பாடுகளைப்பற்றி கீழே பொதுவாகச் சுருக்கமாய் சொல்லியிருக்கிறது.

வர்த்தக சம்மந்தமான வரிகளைப்பற்றிய இலாகா என்று சொல்லப்படும் தாற்காலிகமான புதிய இலாகாதார் புகையிலை வரி விஷயமாய் அமுல் நடத்துவார்கள்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ௸ வரிவிஷயமாய்அமுல் நடத்தும்வேலையானது வர்த்தகவரி உத்தியோகஸ்தரென்று சொல்லப்படும் ஒருஉத்தியோகஸ்தரின் பொதுவான மேற்பார்வையின்கீழ் நடைபெறும். இந்த உத்தி

யோகஸ்தர் ஜில்லாவின் தலைமை ஸ்தானத்தில் இருப்பார். இந்த உத்தியோகஸ்தர் தாமேவரிவிதிக்க மாட்டார். ஆனால் அவர் பிரஸ்தாப ஜில்லாவிலுள்ள வர்த்தகவரி உதவி உத்தியோகஸ்தர்களும் வர்த்தகவரி டெப்யுடி உத்தியோகஸ்தர்களும் பிறப்பிக்கும் உத்தரவுகளின்மேல் செய்துகொள்ளப்படும்சகல அப்பீல்கள் விஷயமாகவும் நடவடிக்கை நடத்துவார்.

வர்த்தகவரி இலாகாவின் வேலைவிஷயமாய் பொதுவாக மேல் விசாரணை செய்யும் அதிகாரமானது வர்த்தகவரி கமிஷனரிடத்தில் சங்கிரமிக்கும். இவர் ரெவினியு போர்டின் ஓர் அங்கத்தினராவார்.

இரண்டுதாலூகாக்கள் ஒரே உத்தியோகஸ்தரின்கீழ் ஒன்று சேர்க்கப் பட்டிருக்கும் சில விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில், ஒவ்வொரு தாலூகாவுக்கும் வர்த்தகவரி உதவி உத்தியோகஸ்தர் ஒருவர் இருப்பார். இவரோடுகூட, பெரியபட்டணங்களில் வர்த்தகவரி உதவி உத்தியோகஸ்தர் ஒருவர் அதிகப்படியாயிருப்பார். சென்னப்பட்டணத்தில் வர்த்தகவரி உத்தியோகஸ்தர் ஒருவர் இருப்பார். இவருக்கு உதவி உத்தியோகஸ்தர்கள் போதுமான பேர் இருப்பார்கள்.

வருஷமொன்றுகு 400 ரூபாய்க்கு மேற்படாத மொத்த விற்பனைத் தொகையுள்ள சில்லறை வியாபாரிகளின் விஷயத்தில் இந்த வர்த்தகவரி உதவி உத்தியோகஸ்தர்கள் லைஸென்ஸுகள் கொடுப்பதுமல்லாமல் மொத்த விற்பனைத் தொகைக்குரிய வரியையும் விதிப்பார்கள். அன்றியும் தனி நபர்கள் வைத்திருக்கக்கூடிய அளவுக்கு மேற்பட்டுப் புகையிலையை வைத்திருப்பதற்காக அவர்கள் விசேஷ அனுமதிச் சீட்டுகள் கொடுக்கலாம்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் சாதாரணமாய் வர்த்தகவரி டெப்யுடி உத்தியோகஸ்தர் ஒருவர் இருப்பார். இவர் ஜில்லாவில் தலைமை ஸ்தானத்தில் இருப்பார். ஆயினும் சில ஜில்லாக்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்த்தகவரி டெப்யுடி உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள் சென்னை ஜில்லாவில் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மூன்று பேர் இருப்பார்கள்.

400 ரூபாய்க்கு மேற்பட்ட மொத்த விற்பனைத் தொகையுள்ள சில்லறை வியாபாரிகளுக்கான லைஸென்ஸுக்களையும், மொத்த வியாபாரிகள், தயார்செய்பவர்கள், தரகர்கள், கமிஷன் ஏஜெண்டுகள் ஆகிய இவர்களுக்குரிய சகல லைஸென்சுகளையும் வர்த்தகவரி டெப்யுடி உத்தியோகஸ்தர் கொடுப்பார். அன்றியும், தயார்செய்யப்பட்ட புகையிலையின் சகல மொத்த விற்பனைகள் சம்பந்தமாகவும் 400 ரூபாய்க்குமேற்பட்ட மொத்த விற்பனைத் தொகையுள்ள வியாபாரிகளின் சகல சில்லறைவிற்பனைகள் சம்பந்தமாகவும் மொத்த விற்பனைத் தொகைக்குரிய வரியை இந்த உத்தியோகஸ்தர்கள் விதிப்பார்கள்.

லைஸென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தர்களால் லைஸென்ஸ்கொடுக்கப் பெற்றுள்ள யாதொரு வியாபாரி முதலியவர்கள் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அந்த உத்தியோகஸ்தர்கள் ஊரூராய்ப்போகும் விற்பனை

தாரர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் அனுமதிச் சீட்டுக்கள் கொடுப்பார்கள். மேலும், தனி நபர்கள் வைத்திருக்கக்கூடிய அளவுக்கு மேற்பட்டுபுகையிலையை வைத்திருப்பதற்காக அவர்கள் அவசியமானபோதெல்லாம் அனுமதிச்சீட்டுகள் கொடுப்பார்கள்.

லைசென்ஸுகளுக்கும் அனுமதிச் சீட்டுகளுக்குமான விண்ணப்பங்களை, அவைகளைக் கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தரின் பெயருக்கே அனுப்பவேண்டும்.

வரி வசூல் சம்பந்தப்பட்டவரையில், அது சகல விஷயங்களிலும் மாதந்தோறும் செலுத்தப்படதக்கதாகும். மேலும், சொற்ப வரி விதிக்கப் பெறுகிறவர்களாய் யாதொரு வர்த்தக வரி உதவி உத்தியோகஸ்தரின் தலைமை ஸ்தானத்தில் வாசம்செய்யும் நபர்களின் விஷயத்தில் பில் கலெக்டர்கள் வரியை வசூலிப்பார்கள். கிராமப் பிரதேசங்களில் வாசம் செய்யும் வரி விதிக்கப் பெறுகிறவர்களின் விஷயத்தில், கிராமப் பெரிய தனக்காரரிடத்தில் வரி செலுத்தப்படத்தக்கதாகும். செலுத்தப்பட்ட ஒவ்வொரு தொகைக்காகவும் அவர் சரியான நமூனாப்படியுள்ள ஒரு ரசீது கொடுப்பார். பெருத்த அளவுக்கு வரி விதிக்கப்பெறுகிறவர்களின் விஷயத்தில், வரி விதிக்கும் உத்தியோகஸ்தரிடம் செக்மூலமாய் தொகை செலுத்தலாம், அல்லது செக் மூலமாகவோ ரொக்கமாகவோ கீழ்க் கஜானாவில் தொகை செலுத்தலாம்.

பிரஸ்தாப ஜில்லாவிலுள்ள வர்த்தகவரி உதவி உத்தியோகஸ்தர், வர்த்தக வரி டெப்யுடி உத்தியோதஸ்தர் ஒவ்வொருவரின் தலைமை ஸ்தானமும் விசாரணை அதிகாரப் பிரதேசமும் இன்னதென்று தெறிவிப்பதற்காக, ஜில்லாக்களின் கலெக்டர்கள் பிரஸ்தாப ஜில்லா கெஜெட்டிலே காலக்கிரமத்தில் ஒரு ஜாபிதா பிரசித்தம் செய்வார்கள்.

பி. ஜி. ஹோல்ட்ஸ்வோர்த்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி

# சென்னை கவர்ன்மெண்ட்.

## ரேவினியு டிபார்ட்மேண்ட்.

அடியிற்கண்ட அறிக்கை விளம்பர மந்திரி இலாகாதாரால் வெளியிடப்பட்டிருக்கிறது:—

**சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் 68-ம்நே. அறிக்கை.**

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1939-ம் ஜுலை 15உ.

வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்ட்—விதிகள்

வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக்குறித்த 1939–ம்ஷத்திய சென்னபட்டணத்து ஆக்டில் கண்ட முக்கியமான நிபந்தனைகளை விளக்கி சமாசாரப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அறிக்கையொன்று 1939-ம் வருஷம் ஜூன் மீ 21உயன்று பிரசுரிக்கப்பட்டது. அந்த ஆக்டின்படிக்கான விதிகளும் விளம்பரங்களும் போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜட்டின் விசேஷ வெளியீடொன்றில் பிரசுரிக்கப் படுகின்றன. அந்த ஆக்ட் 1939-ம்வருஷம் ஆகஸ்ட் மீ 1உயன்று செலவாணியாகத் தொடங்கும் இந்த வரியானது சாதாரணமாய்—

1. சகல டிக்கெட்டுகளிலும் வேடிக்கை வரி முத்திரைகளைப் பதிப்பது மூலமாவது,

2. சவதரிக்கவேண்டிய ரிடர்ன்களின் பிரகாரமாகிலும் கொடுக்கப்படும் டிக்கெட்டுகளின் எண்ணிக்கைக்கேற்றபடியாகிலும் ஒவ்வொருவராய் விடும் சுற்று சாதனத்தைக்கொண்டு உள்ளே விடப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கேற்றபடியாகிலும் செலுத்துவது அனுமதிக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் அந்தப்படிச் செலுத்துவது மூலமாவது செலுத்தப்படும்.

3. இந்த ஆக்டின்படி நிர்வாகம் நடத்துவதற்குச் செய்யவேண்டியிருக்கும் அலுவல்களில், உள்ளே விடப்பட்டதைப்பற்றிய ரெஜிஸ்டர்களையும் சொந்தக்காரர்கள் கையிருப்பில் வைத்துக்கொண்டு உபயோகிக்கும் முத்திரைகளையும் பார்வையிடுவது, ரிடர்ன்களை அனுசரித்துத் தொகை செலுத்தும் முறையை அனுமதிப்பது, அந்த ரிடர்ன்களைப்பெற்றுக் கொண்டு சரிபார்ப்பது, அப்படி அனுமதிக்கப்பட்ட வேடிக்கைகளின் விஷயத்தில் கொடுக்கவேண்டிய டிக்கெட்டுகளுக்கு முத்திரை போடுவது ஆகிய இவைகளைப் போன்ற பெரும்பாலான அலுவல்களைச் செய்ய இந்த விதிகளில் வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. சொந்தக்காரர்கள் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளையும் தங்களுக்குப் பிரயோகப்படத்தக்க விதிகளையும் அனுசரித்து நடக்கும்படிப் பார்த்துக்கொள்வதற்கும் அவர் உத்தரவாதியாவார்,

இந்த விதிகளின் பிரகாரம், வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் கவர்ன்மென்டாரால் அப்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தராவார். பிரத்தியோகமாய் உத்தியோகஸ்தர் எவரும் நியமிக்கப்படாதிருந்தால், பிரஸ்தாப தாலூகாவின் தாசில்தாரராவது, இந்த ஆக்டின்படி நிர்வாகம் நடத்த யாதொரு பிரதேச அதிகார சபையாருக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், சென்னையின் விஷயத்தில் நகர் விசாரணைச் சங்கத்தின் ரெவினியு ஆபிஸரும், வெளியூர் மியுனிஸிபாலிடிகளின் விஷயத்தில் மியுனிஸிபல் கமிஷனருமாவது வேடிக்கை வரி உத்தியோகஸ்தரின் அதிகாரங்களைச் செலுத்துவார்கள். சென்னை நகர் விசாரணைச் சங்கத்தாருக்கும் (மதராஸ் கார்ப்போரேஷனுக்கும் மியுனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் தத்தமக்குரிய விசாரணை அதிகாரப் பிரதேசங்களில் கவர்ன்மென்டார் சார்பாக இந்த வரியை வசூல் செய்ய அதிகாரங் கொடுக்கப் பட்டிருக்கிறது. சென்னைக்கும் இதர மியுனிஸிபல் விஸ்தீர்ணங்களுக்கும் வெளியே, வேடிக்கை வரி உத்தியோகஸ்தரின் அதிகாரங்களைத் தத்தமக்குரிய விசாரணை அதிகாரப் பிரதேசங்களில் உதவி வியாபார வரி உத்தியோகஸ்தர்கள் செலுத்துவார்கள்.

4. 5(a) பிரிவின்படி வரி சம்பந்தமாய் ராஜி ஏற்பாடு செய்துகொள்வதற்காவது, தர்ம சம்பந்தமான வேடிக்கைகளுக்கும் விஞ்ஞான சம்பந்தமான வேடிக்கைகளுக்கும் வரியினின்றும் நிவாரணை யளிப்பதற்காவது அப்படிப்பட்ட வேடிக்கைகள்மீது வாங்கப்பட்ட வரியைத் திருப்பிக் கொடுப்பதற்காவது உள்ள அதிகாரத்தை வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் செலுத்தமாட்டார். ஆனால் அதை, சென்னை நகரத்தில் கமிஷனரும், வெளியூர் மியுனிஸிபாலிடிகளில் ரெவினியு டிவிஷனல் ஆபிஸரும், மற்ற இடங்களில் டெப்யுடி வியாபாரவரி உத்தியோகஸ்தரும் செலுத்துவார்கள்.

5. சென்னை நகர் விசாரணைச் சங்கத்தின் ரெவினியு ஆபிஸருடைய, உத்தரவுகளின்மீது சென்னை நகர் விசாரணைச் சங்கத்தின் கமிஷனருக்கும் யாதொரு வெளியூர் மியுனிஸிபாலிடியின் கமிஷனருடைய உத்தரவுகளின் மீது பிரஸ்தாப ஜில்லாவின் கலெக்டருக்கும், வியாபார வரிச் சிப்பந்தியைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தருடைய அல்லது ரெவினியு டிவிஷனல் ஆபிஸருடைய உத்திரவுகளின்மீது அவர் எந்த உத்தியோகஸ்தருக்கு அடுத்துக் கீழ்ப்பட்டவராயிருக்கிறாரோ அந்த உத்தியோகஸ்தருக்கும் அப்பீல் செய்துகொள்வதற்கு நிபந்தனை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. நகர் விசாரணைச் சங்கத்தின் கமிஷனர் பிறப்பிக்கும் பிரதம உத்தரவுகளின்மீது செய்து கொள்ளும் அப்பீல்களை வேடிக்கைவரி கமிஷனருக்குச் செய்து கொள்ளவேண்டும். கவர்ன்மென்டாரின் மேல் விசாரணைக்குட்பட்டு, இந்த ஆக்ட் அல்லது விதிகளின்படிப்பிறப்பிக்கப்படும் யாதொரு உத்தரவைத் திருத்த வேடிக்கை வரி கமிஷனருக்கு இந்த விதிகளில் அதிகாரங் கொடுத்திருக்கிறது, வியாபார வரி கமிஷனர் வேடிக்கை வரிகமிஷனரின் அதிகாரங்களைச் செலுத்த நியமிக்கப் பட்டிருக்கிறார்.

6. டிக்கெட்டுகளுக்கு முத்திரை போடுவது, டிக்கெட்டுகள் கொடுப்பது, முத்திரைகளை அடித்து விடுவது, ரிடர்ன்களை அனுசரித்துத்

தொகை செலுத்தப்படும் விஷயத்தில் வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் டிக்கெட்டுகள் விஷயமாய் உறுதி கூறுவது ஆகிய இவை சம்பந்தமாய் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறையைக் குறித்தும், வைத்து வரவேண்டியவையும் சமர்ப்பிக்க வேண்டியவையுமான கணக்குகள், ரிடர்ன்கள் ஆகிய இவைகளின் நமூனுக்களைக் குறித்தும் இந்த விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதிகள் பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக்குறித்த சென்னபட்டணத்து ஆக்டின்படிச் செலாவணியாய்க் கொண்டிருந்த விதிகளை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கின்றன.

7. சேரவேண்டிய வரியை, மொத்த வருமானத்தில் கவர்ன்மெண்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய சதவீதப்படி மொத்தமாய்ச் செலுத்துவதற்காக ஷெ ஆக்டின் 5(b) பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்தச் சதவீதமானது நூற்றுக்கு 20 என்று நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறது. இது 4-வது பிரிவின்படிக்கான வரி வீதங்களின் சராசரியளவுக்கு ஏறக்குறையச் சரியாயிருக்கிறது.

8. வேறு விதமாக வேடிக்கை வரி செலுத்துவற்கு அனுமதி பெற்றுக்கொள்ளாத சகல சொந்தக்காரர்களும் ஆகஸ்ட் மாதம் முதல் தேதியன்றும் அதற்குப் பிறகும் உபயோகிப்பதற்காக சரியான வேடிக்கை வரி முத்திரைகளை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த முத்திரைகள் முத்திரை விற்கும் சகல இடங்களிலும் இப்போது விற்கப்படுகின்றன. பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த சென்னப்பட்டணத்து ஆக்டின்படி உபயோகிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட முத்திரைகளை ஆகஸ்ட் மாதம் முதல் தேதியன்றோ அதற்குப் பிறகோ உபயோகிக்கலாகாது. ஆனால், தற்போது செலாவணியாய்க் கொண்டிருக்கும் ஆக்டின் பிரகாரம் பிரதேச அதிகார சபைகளால் கொடுக்கப்பட்ட முத்திரைகளை 1939-ம்வருஷம் ஆகஸ்ட் மீ 7உக்கு முன்பு அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடும் பட்சத்தில், அவைகளின் விலையை வாபஸ் செய்வதற்காக இந்த விதிகளில் ஒரு நிபந்தனை சேர்க்கப்பட்டிருக்கிறது.

9. ரிடர்ன்களை அனுசரித்துத் தொகை செலுத்தும் முறையைப் பிரயோசனப்படுத்திக்கொள்ள விரும்பும் சொந்தக்காரர்கள் வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்கு, அதாவது சென்னை நகரத்தில் நகர் விசாரணைச் சங்கத்தின் ரெவினியு ஆபிஸரும், வெளியூர் மியுனிஸிபாலிடிகளில் மியுனிஸிபல் கமிஷனருக்கும், மற்ற இடங்களில் பிரஸ்தாப தாலூகாவின் தாசில்தார் மேற் பார்த்துக் கொடுக்கும்படி உதவி வியாபார வரி உத்தியோகஸ்தருக்கும் உடனே விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டும்.

பி. ஜி. ஹோல்ட்ஸ்வோர்த்,
கவர்ன்மெண்ட் செக்ரெடரி.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கருந்திட்டாங்குடி.